# “அரசியல் தீர்வு காணுவிட்டால் சிக்கல் ஏற்படும்! இலங்கை மீள்வதும் கஷ்டம்”

(புதுடில்லி)

“புத்தபெருமான் காட்டியவழி மூலமும்; அரசியல் அணுகுமுறை மூலமும் இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு நிச்சயம் தீர்வுகாண முடியும். அன்றேல் இலங்கை பெரும் சிரமமான சிக்கலுக்குள் மாட்டிக்கொள்ளும் அதிலிருந்து மீள்வதும் கடினம்” என்று பாரத வெளியுறவு இணை அமைச்சர் திரு. கே. ஆர். நாராயணன் தெரிவித்துள்ளார்.

லோகசபையில் நேற்று வெளியுறவு அமைச்சின் மானிய கோரிக்கைகள் மீது நடைபெற்ற விவாதத்தில் திரு நாராயணன் இவ்வாறு எச்சரித்தார். அவர்மேலும் கூறியதாவது :-

(8-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 1-25

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 பங்குனி 9 றஜப் 10 இதழ் 40

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 22-3-1986

யாழ்ப்பாணம்

# “எமது சட்டத்தில் குழறுபடிகள் இருக்கவே செய்கின்றன!”

## லலித் ‘ராய்ட்ட’ருக்குப் பேட்டி

[ராய்ட்டர்]

“இலங்கை அரசின் ‘பீனல்’ (குற்றவியல்) சட்டத்தில் குழறுபடிகள் இருக்கவே செய்கின்றன. கைது செய்யப்படுவோரின் விவரங்களை அவர்களது உறவினர்களுக்கு உரிய நேரத்தில் அறிவிக்க பொலிசார் தவறியுள்ளனர்” என்று இலங்கை தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தமக்களித்த பேட்டியில் ஒப்புக் கொண்டுள்ளதாக ‘ராய்ட்டர்’ விசேஷ நிருபர் திரு. ரூபர்ட் மார்கோனி தெரிவிக்கிறார். [ஷ]

## யாழ். கோட்டையிலிருந்து கொட்டடி புறப்பட்ட

# ‘ஷெல்’ தாக்குதல்: இருவர் பலி!

# 24 பேர் காயம்!

(ஐ. சண்முகலிங்கம்)

**யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் பேற்கொள்ளப்பட்ட ‘ஷெல்’ தாக்குதலில் கொட்டடியைச்சேர்ந்த ஒருகுழந்தையும், ஒரு இளம்பெண்ணும் பலியானர்கள். அப்பகுதியைச் சேர்ந்த மற்றும் 24பேர் காயமடைந்தனர்.**

இச்சம்பவத்தில் கொட்டடியைச் சேர்ந்த ரகுநாதன் சிவக்குமார் [1½ வயது]. சேனுதிரர்சா பிரேமலதா [30 வயது] ஆகியோரே பலியானவர்கள் ஆவர்.

காயமடைந்தவர்களில் இருபது பேர் யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

ஏனையோர் தனியார் மருத்துவ மனைகளில் சிகிச்சைபெற்றனர். காயமடைந்தவர்களில் வயோதிபப் பெண்களும், குழந்தைகளுமே அதிகமானவர்களாவர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும், ஒன்றரை வயதுப் பையனும், மூன்று பெண்களுமாக ஐவர் படுகாய முற்று ஆஸ்த்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

மற்றொரு குடும்பத்தைச் சேர்ந்த தாயும், இரு பெண் பிள்ளைகளும் ஒரு ஆண்குழந்தையும் உட்பட நால்வர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

கமலாதேவி என்ற வயோதிப மாது கழுத்திலும், கைகளிலும் குண்டுபட்ட காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மகேந்திரம் வில்லியம் என்பவர் கோட்டையிலிருந்து வெளிவந்த ‘ஷெல்’ தாக்குதலால் காயமுற்ற குழந்தையை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரஎடுத்தபோது அவரும் இரண்டாவது ‘ஷெல்’ குண்டுபட்டுக் காயமடைந்து யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக் கொண்டிருப்பவர்கள் விபரம் வருமாறு:

சிவநாதன்(18 வயது) மோகனச்சந்திரன் [18வயது] ஜெயா [18 வயது] புவனேந்திரன் [30 வயது], லதா [9 வயது] இராசம்மா [72 வயது], எஸ். மகேந்திரன் [26 வயது] கணேஸ் [20 வயது], சபி [19வயது], யமுனு [23 வயது], நாகம்மா (43 வயது), விஜேதினி [48 வயது], விசாகரன் [6 வயது], சிலாமினி [12 வயது], பிறேமினி [17 வயது], சபிராமினி [15 வயது], மகேந்திரன் வில்லியம் [30 வயது]. சுரேஸ்குமார் [1½ வயது], விமலாதேவி [40 வயது]

## நேற்றுக் காலை சம்பவம்

[யாழ்ப்பாணம்]

நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் ஆயுதப்படையினர் பண்ணைப்பகுதியில் வந்துநின்றதால் நகரில் ஓரளவு பதற்றம் காணப்பட்டது.

அவ்வீதியால் சென்றபஸ்கள் மறிக்கப்பட்டு சிலர் தடுத்து வைக்கப்பட்டனர்

பிற்பகல் 2மணியளவில் நகரில் குண்டுவெடிச் சத்தங்களைத் தொடர்ந்து வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டன. நகர் வெறிச்சோடியது.

திடீரென கொட்டடிப் பகுதியில் கோட்டையிலிருந்துவந்த ‘ஷெல்’ விரைந்து வெடித்தது. கொட்டடிப்பகுதி மக்கள் வீடுகளிலிருந்து உடுத்த உடையுடன் பாதுகாப்புதேடி ஓடினுர்கள். 5 நிமிடம் சென்றதும் கொட்டடி வயிரவர் கோவில் ஒழுங்கைக்கு எதிரில் மற்றொரு ‘ஷெல்’ விழுந்து வெடித்தது. பலர் காயமடைந்தனர். கோவிலுக்கு சமீபத்தில் உள்ள குடிசைவீடு ஒன்று தீப்பற்றி எரிந்தது.

### தீயணைப்பு இயந்திரம் வந்தது

நல்லூரிலிருந்து தீயணைக்கும் படையந்திரம் 15 நிமிடங்களுக்குள் அவ்விடத்தை வந்தடைந்தது. ஆனுல் அதற்கு முன் மக்கள் குடிசைத் தீயை அணைத்துவிட்டனர்,

மூன்ருவது ‘ஷெல்’ ஒன்று வில்லூன்றி பக்கத்தில் விழுந்து வெடித்தது. இதனுல் எவருக்கும் சேதமேற்படவில்லை.

முன்னைய ‘ஷெல்’பட்டு காயமடைந்த பெண்களும். குழந்தைகளும் 9ம் வாட்டில் அனுமதிக்கப்பட்டனர். 9ம் வார்ட்டில் அனுமதிக்சப்பட்டவர்களில், ஒரு இளம்பெண்ணும், குழந்தையும் இறந்துவிட்டனர்.

உறவினர்கள் வந்து இருசடலங்களையும், மரணவிசாரணை நடைபெருமலே எடுத்துச் சென்றபோது சிற்றூழியர் ஒருவர் வாசலில் தடுத்ததாகக் கூறப்படுகிறது. இச்சிற்றூழியர் தாக்கப்பட்டதாக வைத்திய அத்தியட்சகருக்கு புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இதுபற்றி இன்று ஆஸ்பத்திரி ஊழியர்கள் கூடி முடிவுஎடுப்பார்கள் எனத்தெரிவிக்கப்பட்டது.

### இரத்ததானம்

யாழ்ப்பாணம்]

‘ஷெல்’ தாக்குதலுக்குள்ளாகி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு இளைஞர்கள் இரத்ததானம் செய்தனர். (ஐ)

## ரொமேஷ் ஏப்ரலில் வருகிறர்

(கொழும்பு)

இந்திய வெளியுறவுக் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி ஏப்ரல் மாத முதல் வாரத்தில் இலங்கை வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது (ய-பி)

## நாவற்குழி முகாமிலிருந்து ‘ஷெல்’ தாக்குதலில்

# மூவர் காயம்

[யாழ்ப்பாணம்]

நாவற்குழி முகாமிலிருந்து நேற்றுக்காலை நடந்த ‘ஷெல்’ தாக்குதலில், ஒருவயதுக் குழந்தையும், வயோதிபர் ஒருவரும், இளைஞர் ஒருவரும் காயமடைந்தனர்.

காயமடைந்த எஸ். சுவாம்பிள்ளை [76 வயது] வி. கிசோபர் [1 வயது] வீ. அரியரத்தினம் [29 வயது] ஆகியோர் நேற்றுக்காலை யாழ். ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம், அரியாலை தபால்கட்டு சந்தியில் நேற்று காலை 10 மணியளவில் நடந்தது.

முதல் ஒரு ‘ஷெல்’ வந்து விழுந்து வெடித்ததாகவும், எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும், மக்கள் அவ்விடத்திற்கு வந்து நின்று பார்த்துக் கொண்டிருந்தபோது மற்றொரு ‘ஷெல்’ வந்து அதேஇடத்தில் விழுந்து

[5ம் பக்கம் பார்க்க]

## ‘தொண்டா’ ஜீப் விவகாரம்:

# சந்தேகமில்லை என்கிறர் பிரதமர்

(கொழும்பு)

“தொண்டமான் தனது ‘ஜீப்’ வண்டியை அரசின்அனுமதி பெற்று தனது தேவைக்காகத தென்னிந்தியாவுக்கு அனுப்பிவைத்துள்ளார். அவர் வைத்துள்ள தேசப்பற்றின் மீது எனக்கு சந்தேகமில்லை” என்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா பாராளுமன்றத்தில் நேற்று கூறினுர்,

“32 ஸ்ரீ 1899 என்ற இலக்கமுடைய ‘ஜீப்’ வண்டியாருக்கு சொந்தமானது?” என்று அத்தனகல எம் பி, திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி. போக்குவரத்துப் பிரதிஅமைச்சர் திரு.எச். குலரட்னவைக்கேட்டபோதே இவ்வாறு பிரதமரால் விளக்கமளிக்கப்பட்டது. (ய-பி)

## மட்டக்களப்பில் ‘தேடுதல்வேட்டை’ தீவிரம்!

# நேற்று 300 பேர் கைது!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதப்படையினரின் தேடுதல் வேட்டை மீண்டும் தீவிரப்படுத்தப் பட்டுள்ளது.

புலனுய்வுத்துறைப் பிரதி பொலிஸ்மா அதிபர் எரிக் குணவர்த்தன மட்டக்களப்புக்கு நேற்றுமுன்தினம் விசேஷ விமான மூலம் திடீர்விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இவரது விஜயத்தைத் தொடர்ந்து நடைபெற்ற இரகசிய பாதுகாப்பு அதிகாரிகளைக் கொண்ட மகாநாட்டை அடுத்தே திடீர் தேடுதல் வேட்டை முடுக்கி விடப்பட்டது

நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு மட்டக்களப்பு நகரில் ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்ட 500க்கு மேற்பட்டோரில் 10பேர் தவிர மீதியானேர் அன்றிரவு 8 மணிக்கு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 5 மணி தொடக்கம் நண்பகல் ஒருமணி வரை நடைபெற்ற தேடுதல் நடவடிக்கையில் 300க்கு மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்நடவடிக்கையின்போது துப்பாக்கிச்சூட்டுச்

(5 ம் பக்கம் பார்க்க)

## ரயில்சேவை இன்று ஆரம்பம்

[கொழும்பு]

யாழ்ப்பாணத்துக்கானரயில் சேவை மீண்டும் இன்று தொடக்கம் ஆரம்பமாகும்.

கொழும்பு கோட்டையிலிருந்து ‘யாழ்தேவி’ இன்று காலை 5 மணிக்குப் புறப்பட்டு. 2-15 க்கு யாழ்.சென்றடையும்.

யாழ்-மருதானை ‘உத்தரதேவி’ ரயில் ஞாயிறு தொடக்கம் சேவையில் ஈடுபடும்.

23 ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து காலைஎட்டு மணிக்கு புறப்படும் ‘உத்தரதேவி’ மருதானையை மாலை 5.50க்கு சென்றடையும்.

‘இன்ரசிற்றி’ ரயில் சேவை மறு அறிவித்தல் வரை ரத்து செய்யப்பட்டுள்ளது.

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

பட்டப்படிப்புக்கான பதிவு விண்ணப்பங்கள் உண்டு. பதிவுக்கான முடிவு திகதி (மார்ச் 25) உடனே பெற்றுக்கொள்ளவும். விக்னு டியுசன் சென்ரர், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். A - 502

சங்கானை மேற்கு பண்டத்தரிப்பில் மூன்று பரப்பு வீடு கட்டக்கூடிய காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளும் முகவரி: மாணிக்கம் குணசிங்கம், காயா வீதி, சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு. C-1355

நல்ல நிலையிலுள்ள National NV 7200 டெக் ஒன்றும் Sanyo கசட் றேடியோவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு ஜெ. ஜெகதீசன் 13¼, பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம், அல்லது வீரமாகாளி அம்மன் அருகிலுள்ள சந்திரன் மோட்டர் கராச். C-1356

Deep freezer, Hall set, பெட்டகம், அல்மாரி, சாப்பாட்டுமேசை, Pressure Cooker, எலக்ரிக்குக்கர், Electric Iron, Fan கிளாஸ் வகைகள், Rosewood Table, சில்வர் பொருட்கள், T.V. Screen, மற்றும் பல உடன் விற்பனைக்கு. 79, Main Street, யாழ்ப்பாணம். C-1362

வீட்டுத் தளபாடங்கள், சிங்கர், Zig Zag தையல் மெஷீன் R X 47, 36, 2 in one கசற் றேடியோக்கள், Wall Clock, Typewritter, நவீனமொடல் Chopper சைக்கிள், English சிறிய சைக்கிள்கள், குளிர் சாதனப்பெட்டி, கிளாஸ்வகைகள், றேடியோக்கள், கண்ணாடி அல்மாரிகள், Show case, Beats Curtain, பெரிய சில்வர் தாம்பாளங்கள் உடன் விற்பனைக்குண்டு. பத்மநாதன், திருநெல்வேலி வடக்கு, ஆடியபாதம் றோட், மருத்துவக்கல்லூரிக்கும் திருநெல்வேலிச் சந்திக்கிடையில். C- 1361

## பிறந்த நாள் வாழ்த்து

### சோ. துஷியா

வல்வெட்டித்துறைகாளி கோவிலடியைச் சேர்ந்த சோமகுலசேகரம் சாந்தலெட்சுமியின் செல்வப் புதல்வி துஷியா தனது முதலாவது பிறந்த தினத்தை 22-3-86ல் (இன்று) வெகுகுதூகலமாக கொண்டாடுகிறார். இவரை ஐயா அம்மா, அப்பா, அம்மாச்சி, அன்ரிமார், பெரிய அப்பாச்சி, சித்தப்பாமார், சின்னப்பா குடும்பத்தினர் பெரிய அம்மாச்சி குடும்பத்தினர், மற்றும் பெரிய மாமி, சின்னமாமி' அத்தான்மார், மச்சாள்மார், பருத்துறையில் இருக்கும் மணியம் குடும்பத்தினர், மற்றும் பக்கத்துவீட்டு அன்ரிமார்கள், மாமாக்கள் அவனைவரும் முத்துமாரிஅம்மன்அருள்பெற்று பல்கலையும் பெற்று வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

C-1185

## விற்பனைக்கு

(Broilers) புரொயிலர் இறைச்சிக் கோழி, கோழி எரு, நல்லின தென்னங்கன்றுகள் முதலியன விற்பனைக்குண்டு. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். [C 1317]

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். C-1220

Yamaha 125 No. 7 ஸ்ரீ 6761, Honda CD 125 No. 10 ஸ்ரீ 7782, இருமோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ச. செல்வா 199/3 கில்னர் கல்லூரி லேன், யாழ்ப்பாணம். (C- 1367)

Broilers இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம், சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர். (C-1366)

Pioneer டெக்செற், 250 W - 300 W National Two in one, National Radio with Clock Philips - Tranistor Radio National T V 20'' - B/W, Gold Star T V 12'' B/W, Sony T V 20'' 2020 — 2032, National வீடியோ டெக் NV. 250 — 788, மற்றும் பல பொருட்கள். S T L வீடியோ கிளப், No- 3, நவீன சந்தை மேல்மாடி. திருநெல்வேலி (C- 1369)

## தேவை

கிளிநொச்சி மாவட்டத்தில் எமது நிறுவனத்தின் பிரதிநிதியாக கமிசன் அடிப்படையில் பணிபுரிய 30 வயதுக்கு மேற்பட்ட ஒருவர் உடனே தேவை. கிளிநொச்சியிலிருந்து 3 மைல் சுற்றுடலில் வசிப்பவராகஇருத்தல் அவசியம். தொடர்பு கொள்ளவும்: பிராந்திய வர்த்தக சேவை, கணேசபுரம், கிளிநொச்சி. [C 1327]

பெண் விற்பனையாளர்கள் தேவை. அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் 25-3-86க்கு முன் தொடர்பு கொள்ளவும் ரெலிகோணர், நவீனசந்தை, சாவகச்சேரி. (C 1288)

கொக்குவில் அரசாங்க வைத்தியசாலை அண்மித்த ½ கட்டை சுற்றுடலில் நவீன வசதிகளுடன் அமைந்த வீடு உடன் தேவை. தொடர்பு: Dr. M. சதானந்தன், அரசினர் வைத்தியசாலை, கொக்குவில். C-1311

ஓட்டோ றிக்ஷா ஒன்று [Auto Rickshaw] தேவை பதிவு இலக்கம், பதிவு வருடம், மேக், தற்போதய நிலை, விலைவிபரம் யாவும் தெரிவிக்கவும். மு. கதிர்காமத்தம்பி, ''கதிர் - அகம்'' துன்னாலை வடக்கு, கரவெட்டி. C-1313

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## வாடகைக்கு

முத்திரை சந்தை நல்லூர் பிரதான றோட்டில் 50 அடி நீளம் 25 அடி அகலமுள்ள சகல வசதிகளுடன் அரசாங்க/ கூட்டுத்தாபனம்/ தனியார் துறையினருக்கு வாடகைக்கு கொடுப்பதற்கு இடம் இருக்கிறது. முற்பணம் கோரப்படும். தொடர்பு: திருமதி சண்முகநாதன், நடன முருகன் றேடிங் சென்ரர், பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். C-1338

## கல்வி

A/L 86 பரீட்சையில் திறமைச் சித்திபெற உதவும் 8 வருடகடந்தகால வினுக்களும் விடைகளும் 14 பாடங்களில் கிடைக்கும். மீட்டலுக்கு அதிசிறந்தது. உங்கள் புத்தக வியாபாரியை அணுகுக. C-1351

5-ஆம் வகுப்பு [6-ம் ஆண்டு] புலமைப் பரிசில் பரீட்சையில் திறமைச் சித்திபெற உதவும் 12 வருட கடந்தகால வினுக்களும் விடைகளும் தமிழ் மொழி, கணிதம் வெளிவந்துவிட்டன. ஒவ்வொன்றும் ரூபா 15/- உங்கள் புத்தக வியாபாரியை அணுகுக. C-1352

பாலர் ஆசிரியர்பயிற்சிநெறி 1986 தொடர் விரைவில் ஆரம்பமாகிறது. ஜி. ஸி. ஈ. சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம். குடாநாட்டுக்கு வெளியில் வசிப்போர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம் 42, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம், [C1316]

## Wanted

Wanted a lady resident warden for a Christian Girls Home at Uduvil. Applications will be considered from persons competent in English and with an aptitude to work with children, Salary negotiable according to qualifitions and experience Please apply to the Secretary, J D, C S I, Diocean Office, Vaddukoddai, before the 10th of April, 1986

C 1290

## சாவகச்சேரி நகராட்சி மன்றம் ஆதனவரி அறிவித்தல்

1986ம் ஆண்டு 1ம் கந்தாயத்துக்குரிய ஆதனவரியை 31-3-86ந்திகதி திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்பு இக்காரியாலயத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள். தவறின் இத்திகதிக்குப் பின்பு செலுத்தப்படும் வரியுடன், வசிப்பிட வளவுகளுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் பதினைந்து வீதமும் (15 வீதம்), ஏனைய ஆதனங்களுக்கு இருபது வீதமும் (20 வீதம்) கூடுதலாகச் சேர்த்து அறவிடப்படுமென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆதனவரி செலுத்தப்படாத வெற்றுக்காணிகளைச் சுவீகரிப்பதற்குச் சபையால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஆகவே காணி உரிமையாளர்கள் உடனடியாகச்சபையுடன் தொடர்பு கொள்ளுமாறுகேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

த. நவரத்தினராசா,
செயலாளர்,
நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
18-3-1986.

A 394

---

குறைந்த செலவில் சிறந்த கலர்ப்படங்களுக்கு:

**ரியூடர் கலர் பிலிம்**

(ஜப்பானின் அதிநவீன உற்பத்தி)

**TUDOR COLOUR FILM**

(Latest in Japans Colour Film Production)

விநியோகஸ்தர்:

**Suppreme Associates,**

185/6, நியூலலிதா கட்டடம்,
(வின்ஸர் தியட்டர் முன்பாக)
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ கலர் பிலிம் டெவலப்பிங், பிறின்டிங் ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(C 1368)

## VACANCIES

Ministry of Interior Hospital Saudi Arabia requires the following Medical personnel with specialist qualifications MRCP or FRCS. Age below 58 years.

Consultant Opstetrician
Consultant Anaesthetrist
Consultant Clinical Pathlogist
Consultant Gynaecologist
Consultant Histopathologist

Salaries and other fringe benefits attractive.

Other qualified Specialists either MRCP or FRCS and para medical staff could register with us giving full bio-data.

Apply to:
CLARK DAVIES MANPOWER SERVICES,
P. O. Box 2071,
Colombo.

C-1365

## தேவை

1. மெசின் மைன்டர் (Mechine Minder)
2. கொம்பஷிட்டர் (Compositor)
3. டிலிவறி பையன் (Delivery Boys)

மிகவும் பிரபலியம் வாய்ந்த நிறுவனம் யாழ்ப்பாணத்தில் தொடங்கவிருக்கும் புதிய புதினப்பத்திரிகை ஸ்தாபனத்திற்கு விண்ணப்பிக்கவும்.

கட்டுப்பணம் கட்டக்கூடியவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும்.

**தெரிவுக்குழு,**

106, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

(C 1349)

---

முருங்கன் களிமண்புலத்திலிருந்து காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலைக்கு தினசரி 100 தொன் களிமண் ஏற்றிக்கொண்டுவந்து பறிப்பதற்கான

## கேள்விப்பத்திர விண்ணப்பம்

கீழ்க் கூறப்பட்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்க முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் தொழிற்சாலை முகாமையாளர், காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை அவர்களினால் கோரப்படுகிறன.

1. மேற்கூறப்பட்ட கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை தொழிற்சாலை விநியோக உத்தியோகத்தரிடமிருந்து மீளப்பெறமுடியாத ரூபா 50/-கொடுப்பனவு செய்து பெறப்பட்ட கேள்விப் பத்திரங்களின் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்
2. கேள்விப்பத்திரத்திற்கான விண்ணப்பப்படிவம் 1986ம் ஆண்டு மார்ச் மாதம் 26ந்திகதி நண்பகல் 12 00 மணிதொடக்கம் 1986ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் திகதி வரையும் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை விநியோகப்பகுதியில் வழங்கப்படும்.
3. கேள்விப்பத்திர விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல் 1986ம் ஆண்டு ஏப்றல் மாதம் 8ம் திகதி பி.ப 2. 00 மணியுடன் முடிவடையும்.

தொழிற்சாலை முகாமையாளர்,
காங்கேசன் சீமெந்துத்தொழிற்சாலை,
காங்கேசன்துறை.

[A400] 1986-03-20.

ஜம்மு - காஷ்மீர்

# இந்திய - பாக். எல்லைப் பகுதியில்

# இராணுவ பதற்றம் அதிகரிப்பு!

## இரு தரப்பும் உஷார் நிலையில்!

புதுடில்லி, மார்ச் 21.

**ஜம்மு - காஷ்மீர் பகுதியிலுள்ள இந்திய, பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் இராணுவ ரீதியிலான பதட்டமும், மோதல்களும் நாளுக்கு நாள் வலுவடைந்து வருகின்றன.**

கடந்த சில நாட்களில் மட்டும் சுமார் 15 பாகிஸ்தானிய இராணுவ கமாண்டோக்களை இந்திய இராணுவத்தினர் சுட்டுக் கொன்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இப்பாகிஸ்தானிய இராணுவத்தினர் எல்லைக்காவல் படையினரையும் மீறி இந்திய நிலப்பகுதிக்குள் ஊடுருவியதாகக் கூறப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தரப்பில் இந்தியத்தாக்குதலுக்கு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும், இந்தியா இது குறித்து கருத்து வெளியிடுகையில், பாக் இராணுவத்தினரின் அத்துமீறல்களே மோதல்களுக்கு வழிவகுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மோதல் சம்பவங்களைத் தொடர்ந்து இருதரப்பு இராணுவ அவதானிகளும் தத்தமது எல்லைப்பகுதிகளில் கடுங்கண்காணிப்பில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (கி)

## பொலிஸ்காரருக்கு மரணதண்டனை

[பீகிங் - ராய்ட்டர்]

பெண்கள் மீது குற்றமிழைத்ததற்காக சீன நீதிமன்றமொன்று அந்நாட்டுப் பொலிஸ்காரர் ஒருவருக்கு மரணதண்டனை விதித்துள்ளது.

இந்தப் பொலிஸ்காரர் 8 பெண்களைக் கற்பழித்ததாகவும் வேறு 3 பெண்களை அவமானப்படுத்தியதாகவும் கூறப்பட்டது.

சீனுவில் அண்மைக்காலமாக லஞ்சம், ஊழல் அதிகாரிகளின் குற்றச்சாட்டுகளுக்கெதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது (செ)

## இரு நாஸிகளுக்கு ஆயுள் தண்டனை

[கிழக்கு பெர்லின் ராய்ட்டர்]

கிழக்கு ஜேர்மனி இரு முன்னுள் நாஸி வீரர்களுக்கு ஆயுள் தண்டனை விதித்துள்ளது. எபர்காட் தீச்சனர், கோர்ட் புருக்னர் ஆகிய இந்த இருவரும் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது ஆயிரக்கணக்கான யூதமக்களை கொல்லக்காரணமானவர்கள். போலந்திலுள்ள யூத ஒழிப்பு முகாமொன்றில் கடமையாற்றும் போதே இவர்களிருவரும் இந்த யூதமக்களை கொன்றனர். (இ-செ)

## பி பி ஸி. யில் வெளியான தகவல்கள்:

## இவ்வருட ஜூனின் பின் கிழக்கில்

# மாகாணசபைத் தேர்தல்கள்?

## வடக்கில் இப்போதைக்கு இல்லை!

[லண்டன்]

இவ்வருடம் ஜூன் மாதத்தின் பின்னர் இலங்கையின் கிழக்கு மாகாணத்திற்கு மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதுபற்றி அரசாங்கம் அறிவிக்கவுள்ளது என பி.பி.ஸி. நேற்று அறிவித்தது.

பி. பி. ஸியின் இலங்கை நிருபர் திரு. ஹோக்ஸ்லி தொகுத்துள்ள செய்தியின் விபரம் வருமாறு:-

''இலங்கை அரசாங்கத்தின் உயரதிகாரிகளின் கருத்துப்படி இலங்கையில் எந்த அதிகாரப் பரவலாக்கல் திட்டத்திற்கும் கிழக்கே சோதனையளிக்கின்றது. தமிழ்க் கெரில்லாக்கள் இந்தப் பிரதேசத்தை வடக்குடன் இணைக்கக் கோருகிறார்கள். அதன்மூலம் அவர்கள் தங்கள் லட்சியமான ஈழத்தை அடையப் பார்க்கிறார்கள். ஆனால் தமிழ் கெரில்லாக்களின் இவ்இணைப்புயோசனையை இலங்கை அரசாங்கம் நிராகரித்து விட்டது இந்த இணைப்புப்பற்றிய பிரச்னையே பேச்சுவார்த்தைகளுக்குப் பெரும் முட்டுக்கட்டையாகவுள்ளது. அத்துடன் கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட சரிசமனாகியுள்ளது.

### ராணுவத் தாக்குதல்

''இந்தக் காரணத்திற்காகக் கிழக்குப்பகுதியிலுள்ள தமிழ்க் கெரில்லாக்களை ஒழிப்பதற்காக ஒரு பெரும் ராணுவத் தாக்குதலைஅரசுமேற்கொண்டுள்ளது. அத்துடன் தனது லட்சியத்தை அடைய இன்னமும் ஒரு யாத காலம் போதுமென இலங்கை அரசாங்கம் கூறுகிறது.

### மாகாண சபைத் தேர்தல்கள்

''அதன் பின்னர் இப்பகுதியின் பெரும்பாலான நிர்வாகத்தைப் பொறுப்பெடுத்து நடத்துவதற்கான ஒரு சபையை நிறுவுவதற்கான தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

''அரசாங்கத்தின் முழுநோக்கமும் யாதெனில், பெரும்பான்மைச் சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்கள் உட்பட ஏனைய மாகாணங்களுக்கும் இத்தகைய சபைகளை உருவாக்குவதற்கான தேர்தல்களை அரசாங்கம் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

### வடக்கில் இல்லை

''இலங்கை அரசாங்கத்தின் இந்தத் திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் இத்தீவின் வடக்குப் பாகம் இணைக்கப்படாது என்றே தோன்றுகிறது. (அதாவது இலங்கையில் மாகாண சபைத் தேர்தலை நடத்தும் திட்டம்) இப்பகுதியில் தமிழரே பெரும்பான்மையினராக வாழ்கின்றனர். அதுமட்டுமல்ல; இப்பகுதியின் பெரும்பாலான பகுதிகள் தமிழ் தீவிரவாதிகள் வசமுள்ளன

''இலங்கை அரசாங்கத்தின் உயரதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், ''தமிழ்த் தீவிரவாதிகள், ஒன்றில் அரசாங்கம் வழங்கும் இந்தளவு சுயாட்சியை ஏற்றுக்கொள்ளப் போகிறார்களா அல்லது தொடர்ந்து போராடப் போகிறார்களா? என்பதைத் தீர்மானிக்கவேண்டும்.

### ஒருவார அமைதி

''இலங்கை அரசாங்கம் கடந்த சனிக்கிழமை முதல் அறிவித்த ஒருதலைப் பட்சமான போர் நிறுத்தத்தை யடுத்து இப்பகுதியில் சிறிது அமைதி நிலவுகிறது ஆயினும் தமிழ்த் தீவிரவாதிகளிடமிருந்து, தாங்கள் அமைதியை இந்தக்கணத்தில் விரும்புகின்றனரா என பதுபற்றிக் கருத்தொன்றும் இன்னமும் வரவில்லை அத்துடன் அரசாங்கம் அறிவித்த ஒரு வாரகாலப் போர் நிறுத்தம் முடிவடையும் தறுவாயில் உள்ளது''.

—தொகுத்தவர்: செந்தில்.

## போத்தமும் போதை வஸ்தும்

[லண்டன் - ராய்ட்டர்)

பிரபல பிரிட்டிஷ் கிரிக்கட் வீரரான இயன் போத்தமுக்கு எதிராக போதை வஸ்த்து வைத்திருந்த குற்றச்சாட்டிற்காக வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது-

போத்தம் அண்மையில் நிவாரணநிதி திரட்டும் திட்டமொன்றிற்காக பாதயாத்திரை ஒன்று மேற்கொண்டிருந்தது தெரிந்ததே! அந்த

(7ம் பக்கம் பார்க்க)

# அமைச்சரின் கூற்றுக்கு சுவிஸ் தமிழர் ஆட்சேபம்!

## பலர் கைதாகி விடுதலை

[சுவிஸிலிருந்து ஜெயகாந்த்]

சுவிற்சர்லாந்து தலைநகர் பேர்ணுக்கு விஜயம் செய்த இலங்கை வெளிநாட்டமைச்சர் ஜனுப் ஏ.ஸி. எஸ். ஹமீட் தெரிவித்த கருத்துக்கு ஆட்சேபம தெரிவித்து இங்கு ஆர்ப்பாட்டம் நடத்திய பெருந்தொகையான தமிழர்கள் காவற்படையினரால் கைது செய்யப்பட்டு சிலமணி நேரத்தின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

அமைச்சரின் கூற்றுக்கு இங்குள்ள பல நிறுவனங்களும் எதிர்ப்புத் தெரிவத்துள்ளன.

### அமைச்சர் கருத்து

இங்கு விஜயம் செய்த அமைச்சர் ஜனுப் ஏ ஸி.எஸ். ஹமீட், அகதிகளுக்குப் பொறுப்பான அமைச்சின் தலைவி திருமதி எலிஸபெத் ஹொப்புடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது தெரிவித்த கருத்து வருமாறு:-

''சுவிஸில் இருக்கும் 4,600 தமிழர்களும் உழைக்கும் நோக்கத்துடன் வந்தவர்களே தவிர அரசியல் காரணங்கள் அல்ல. அவர்கள் நாடு திரும்புவதால் எதுவும் ஏற்படாது

'மூன்றுவது உலகநாடுகளில் ஜனநாயகத்திற்குப் பேர் போன பழமையான நாடு இலங்கை. எந்தப் பிரஜையும் தேவையானபொழுது நாட்டிலிருந்து வெளியே செல்லவும், திரும்பவும் வசதியுண்டு. அதேபோலத் தமிழர்களும் நாடு திரும்பலாம். ஆனல் அவர்கள் இங்கு முக்கியமாக இருப்பது உழைப்பதற்கே!

'500 ஸ்டேர்லிங் பவுண்களுடனும் பாஸ்போட்டுடனும் வெளியே வருகிறார்கள். 1983 ஜூலையில் நடந்தது என்ன? தமிழ்த்தீவிரவாதிகள் 13 இராணுவத்தைக் கொலைசெய்ததற்காகப் பெரும்பான்மை மக்கள் காட்டிக்கொண்ட எதிர்ப்பே'' என்று கூறினர்.

### தாக்குதல் சம்பவம்:

## ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம் விடுத்த அறிக்கை

(சென்னை)

காரைநகர் கடற்படையினர் மீது மேற்கொண்ட தாக்குதல்களில் மூன்று கடற்படைப்படகுகள் சேதமடைந்ததாக சென்னையிலுள்ள ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

கடந்த14ம் திகதி சிறீலங்கா கடற்படையினருக்கு எதிராக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப்படை (பி. எல். ஏ) நடத்திய கடல்கண்ணிவெடித் தாக்குதலில் ஆறுகடற்படைச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் கடற்படைக்குச் சொந்தமான ரோந்துப் படகும் நிர்மூலமாக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து சிறீலங்கா கடற்படையினர் ரோந்துப்படகுகளில் கடற்கண்ணிகளை அகற்றுவதில் ஈடுபட்டனர் கடற்கண்ணிகளை அகற்றுவதில் ஈடுபட்டிருந்த படகு மீது கடந்த 16ம் திகதி அன்று மக்கள் விடுதலைப்படை மேற்கொண்ட தாக்குதலில் கடற்படைப் படகு தகர்க்கப்பட்டது

''இதன்பின்மக்கள்மீது கடற்படையினர் மேற்கொண்ட மோட்டார் ஷெல் தாக்குதலை முறியடிப்பதற்காக மக்கள் விடுதலைப்படையினரும்மோட்டார் தாக்குதலை மேற்கொண்டனர்.

''கடந்த 18ம் திகதி அன்று சிறீலங்கா கடற்படையினருக்குச் சொந்தமான மற்றுமொரு ரோந்துப் படகும் தகர்க்கப்பட்டது. இந்த நடவடிக்கையும் மக்கள் விடுதலைப் படையினராலேயே மேற்கொள்ளப் பட்டது'' என்று ஈழ மக்கள் செய்தித்தொடர்பு நிலையம் அறிவித்துள்ளது.

தேசிக்காய் வாசனையுடன்




எம் டீ நீல சோப்

115 கிறும் ரூபா 2/- மட்டுமே.
சிக்கனத்திற்கும், பாதுகாப்பான வெண் சலவைக்கும், நறுமணத்திற்கும் இன்றே வாங்குங்கள்

புதிய எம் டீ நீலசோப்

எம் டீ என்ரபிறைஸ், அச்சுவேலி. (A 406)

### மணிவாக்கு

எங்கும் மாதவர் மாமறை முழக்கம்
எங்கும் சான்ருேர் அறவுரை முழக்கம்
எங்கும் தொண்டர் சுதந்திர முழக்கெனிற்
பொங்கும் இன்பம் புவிமிசைச் சிறந்தே.
— சிவயோகசுவாமிகள்

# நமது நோக்கு

## பிரபுத்துவ பாடசாலைகளின் அனுமதி ஒழுங்கீனம்

றோயல் சென். தோமஸ் போன்ற கொழும்பு பிரபல கல்லூரிகளின் பெருமை பேசுவதில் கொழும்புத் தினசரிகளுக்குத் தனிப்பட்ட ஒரு ஆனந்தம். இலங்கை அரசியலுக்கும் ஆட்சிக்கும் இவ்விரண்டுமே கண்களும் காதுகளும் என்ற கருத்து அடிக்கடி வற்புறுத்தப்படுத்துவதால் நாட்டின் ஏனைய பாகங்களில், கிராமப்புறங்களில் கல்வி இரண்டாம் தர பிரஜைகளுக்கென்ற கருத்து மறைமுகமாக வழங்கப்படுகிறது.

இலவசக்கல்வியும், அரசாங்க நிர்வாகத்தில் பாடசாலைகளும், தாய்மொழிக் கல்வியும் ஒரு கேலிக்கூத்து என்று நினைக்கின்ற பணக்கார வர்க்கமும், அதற்குப் பக்கபலமாக உள்ள ஆட்சியும் பிரபலமற்ற நாட்டுப்புற சாதாரண பாடசாலைகளுக்கு முதலைக் கண்ணீராவது வடிக்கத் தெரியாது திக்குமுக்குப்படுகின்றனர்.

கொழும்பில் மட்டுமல்ல, சகல நகரங்களிலும், பிரபல பெரிய கல்லூரிகளிலும் மாணவர் அனுமதி மனித உரிமையை மீறிப்போவதை உயர் நீதிமன்றம் காரசாரமாகக் கண்டித்திருக்கிறது.

35 வருடம் நிரந்தரமாக கொழும்பு றோயல்கல்லூரி சுற்றாடலில் வாழ்ந்து வரும் திரு மகிந்தபெரேரா தனது மகனுக்கு றோயல் கல்லூரியின் முதலாம் வகுப்பில் அனுமதி மறுக்கப்பட்டது என்று உயர் நீதிமன்றத்தில் விண்ணப்பித்திருந்தார்.

தனது அடிப்படை உரிமை ஒன்று மறுக்கப்பட்டதை உணர்ந்த திரு. பெரேரா, பாடசாலை அதிபருக்கும் இது தொடர்பான அதிகாரிகளுக்கும் எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

தனது வசிப்பிடம் சரியானதென்று நிரூபிக்காததால் அனுமதி மறுக்கப்பட்டதென்று றோயல் கல்லூரி அதிபர் தெரிவித்திருந்தார் தனது உழைப்பால்- தனது பெற்றோரின் 35 வருட உழைப்பால். புதுச்சட்டத்தின்படி தான் வாடகைக்கிருந்த வீட்டை விலைக்கு வாங்கியதை அதிபர் கணிப்பில் கொள்ளவில்லை.

வழக்கை விசாரித்த பிரதம நீதியரசரும் மற்றும் இரு உயர் நீதிமன்ற நீதியரசர்களும் இப்புகழ் பெற்ற பள்ளிக்கூடத்தில் இத்தகைய ஒழுங்கீனம் பேரவமானத்துக்குரியதென்றும், இதனைப்போல எத்தனை மாணவர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருக்கலாமென்றும், அவர்கள் நீதியைத் தேடுவது சிரமமென்ற தங்கள் தலைவிதியை நொந்து வேறு பாடசாலைகளுக்கு சென்றிருக்கலாமென்றும் தீர்ப்பளித்தனர்.

மாணவன் தாரிந்து திலான உடனடியாக அனுமதிக்கப்படவேண்டுமென்றும், கல்லூரி அதிபர் 2500 ரூபாய் வழக்குச் செலவாக விண்ணப்பதாரருக்கு வழங்க வேண்டுமென்றும் தீர்த்தனர். நாட்டின் அரசாங்கப் பாடசாலைகளில் முதலிடம் வகிக்கின்ற றோயல் கல்லூரி நீண்ட காலமாகச் சமூகத்தின் முதல்வடி குடும்பங்களுக்கு உரித்தாக இருந்தது.

திறமை வாய்ந்த சாதாரண குடும்பங்களிலிருந்து புலமைப்பரிசு பெறுவோரே அங்கு அனுமதி பெற்றுவந்தனர்.

எனவே ஜனநாயக முறையில் கல்லூரி அயலில் வாழும் பிள்ளைகள் இன்றைய சட்டதிட்டங்களின்படி அனுமதிக்குரித்தானவராலும் "பிரபுக்களின்" பிள்ளைகளுடன் சரிநிகராகக் கல்வி பயில்வது நினைத்துப் பார்க்க முடியாத நிலையில் இருக்கின்றது.

நாட்டின் நீதிமன்றம் நெறி தவரு நீதி வழங்குமென்ற நம்பிக்கை, பிரபுத்துவம் என்ற பாலைவனத்தில் ஒரு பசும்புற்றரை போல் காட்சியளிக்கிறது.

எத்தனைபேர் இந்த இடத்தின் படியேறி நீதிகோரத் தயாராக இருக்கின்றனர்.

அடிப்படை உரிமைகள் இந்த நாட்டில் பேணப்படுகின்றனவா என்ற விடைக்கு உயர்நீதிமன்றம் அளிக்கும் நிவாரணம் எவ்வகையிலும் போதாது.

கல்வி அமைச்சும் அதன் அதிகாரிகளும், பாடசாலை அனுமதி என்ற ஊழல் நிறைந்த பிரச்னைக்குத் தக்க தெளிவான சட்டமூலம், பாடசாலை அதிபருக்கு இப்பாரிய பொறுப்பை வழங்க வேண்டும்.

கல்வி அதிகாரிகளின் சிவப்பு நாடா நிர்வாகம், பாடசாலை அதிபரின் பொறுப்பிலிருக்கும் இவ்விடயத்திற்கு அனுவசிய தலையீடாகவிருப்பதோடு தன் வீட்டின் அமைப்பைத் தானே பொறுப்பெடுத்துச் சீராக்கும் உரிமையைப் பாடசாலை அதிபருக்கு மறுத்துவருகிறது.

### இன்று
(கொழும்பு)

இலங்கை - பாகிஸ்தான் கோஷ்டிகளிடையே, நடைபெறும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளின், 3-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி, இன்று கொழும்பு சரவணமுத்து விளையாட்டரங்கில் ஆரம்பமாகின்றது.

இலங்கைக் கோஷ்டிக்கு வீரர் டுலிப் மென்டிஸும், பாகிஸ்தான் கோஷ்டிக்கு வீரர் இம்ரான்கானும் தலைமை தாங்குகின்றார்கள்.

முதலாவது டெஸ்டில் பாகிஸ்தானும், இரண்டாவது டெஸ்டில் இலங்கையும் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டி இலங்கை ரூபவாஹினியில் நேரடி ஒளிபரப்புச் செய்யப்படுகிறது. (வி)

### இன்று குருபூசை

# சிவயோக சுவாமிகள்

ஈழவள நாடு எங்கள் தாய்நாடு. மலைவளனும், ஆற்றுவளனும், நிலவளனும், கடல்வளனும் பொருந்திய நாட்டினிடத்தே வேலவன் விரும்பியுறையும் கதிர்காமமும், ஆளுடைபிள்ளை, ஆளுடை நம்பிகள் என்னும் சமயாசாரிகள் இருவர் அருளிய தேவாரத் திருமுறைப் பாடல்கள்பெற்ற திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் என்னும் திருத்தலங்களும் விளங்கும். இயற்கை வளனோடு தெய்வத்தன்மையும் பொருந்தி விளங்கும் இவ்வீழத்திருநாட்டில் வடபாலுள்ள சிறந்த நகரம் செந்தமிழ் வளங்கும் யாழ்ப்பாணமாகும். யாழ்ப்பாணனோடு தொடர்புபடுத்திப் பேசப்படும் யாழ்ப்பாணம் என்னும் பெயரையுடையது. கீரிமுகம் மாறி மனிதமுகம்பெற்ற நகுலமுனிவர் தீர்த்தமாடி தவஞ்செய்த இடமாகிய கீரிமலை இங்குஒருபால் உள்ளது. மாருதப்புரவீகவல்லி என்னும் வனிதையின் மா (குதிரை) முகம்மாறி, இறைவன் அருள்பெற்ற மாவிட்டபுரம் ஒருபால் உள்ளது. யாழ்நகரின் இதயம் போன்று அன்பர்களுக்கு வாழ்வை அளிக்கும் தையல்நாயகி சமேத வைத்தீஸ்வரன் கோயில் ஒருபால் உள்ளது. திருவெங்கடேசப் பெருமாள் கோயில்கொண்ட பெருமாள் கோயில் ஒருபாலும் இராமர் வில்லூன்றியதலம் எனப்படும் வில்லூன்றி ஒருபாலும், தமிழ் மன்னரது பழைய தலைநகராய் விளங்கிய ஊரும், நாவலர் பெருமான் பிறந்த ஊரும், நாடெங்கும் அருள்பாலிக்கும் குமரக்கடவுள் வீற்றிருக்கும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலும் ஒருபால் விளங்கும்.

பழமையும் மகிமையும் மிக்க யாழ்நகரின் தென்றிசையில் முன்னுளிலே கொழும்பு நகருக்குச் செல்வோர் மரக்கலங்களில் ஏறிப் பயணஞ் செய்யுந் துறைமுகமாகிய காரணத்தால் கொழும்புத்துறை எனப் பெயர்பெறும் சிற்றூர் விளங்குகின்றது. இவ்வூரின்கண் நிலவி நானிலமெங்கும் அருளொளி வீசிய ஞானகுரவனே எங்கள் குருநாதன். எல்லோரும் இவர்களை கொழும்புத்துறை யோக சுவாமிகள் என்று அன்போடு வழங்கிவரலாயினர். சுவாமிகளின் பிறப்பிடம் மாவிட்டபுரம். பெரும்பாலும் வாழ்ந்து வந்தஇடம் கொழும்புத்துறை யாகும்.

இவர்கள் வாலிபராக இருந்த காலத்தில் நல்லூரில் செல்லப்பா சாமியார் என்னும் திருப்பெயர் பூண்ட மாபெருந் தவத்தினராகிய சிவஞானியார் வாழ்ந்துவந்தார். இச்சிவஞானியரே எங்கள் குருநாதரின் ஞானகுரு ஆவார். இவர்களுக்கு ஆளானபின், சுவாமிகளின் இனசனத் தொடர்புகள் தாமாகவே கழன்று விட்டன. செல்லப்பா சுவாமிகளே தமது தந்தையாகவும், தாயாகவும், சார்கதி ஆவானுமாகக் கொண்டு அவர்களுக்கே தாம் மீளா அடிமையாயினுர்கள். அக் குருநாதரின் வாக்கு இவர்களுக்கு வேதவாக்காயிற்று. நல்லூர்த் தேரடியில் தம் குருவை இனிது கண்டு ஆட்கொள்ளப்பட்டார்.

"...... குன்று போல்
வந்தானொருவன் வளஞ்
சேரும் நல்லூரில்
தந்தா னருளனக்குத்தான்"

செல்லப்பா சுவாமிகள், "நீ ஆரடா" என்று அதட்டி, 'உன்னுள்ளே பாரடா" என்றும், "உள்ள பற்றெல்லாந் தீரடா" என்றும் பணிக்கப் பெற்ருர்.

"தோடியிற்றேசிகனை கண்டு
தெரிசித்தேன்
ஆரென் றறிவாயடா"
"தேரடியிற் றேசிகனைக்
கண்டு தெரிசித்தேன்
தோடாவுள் ளன்ருன்
சிரித்து"
"தேரடியிற் றேசிகனைக்
கண்டு தெரிசித்தேன்
தீரடாற்பற் றென்ருன்
சிரித்து"
"...நல்லையம்பதியில் வாழ்
வளிக்கச் சற்குருவாய்த்
தாளகாட்டி யாண்டான்
தனி"



நல்லூர்க் கோயினுள் வீற்றிருந்து அருள்பாலிக்கும் அறுமுகச்சிவனும் தேரடியினுல் வீற்றிருக்கும் செல்லப்பா தேசிகரும் ஒருவரே எனும் தெளிவு பெற்ருர். தமது ஞானகுரவன் போகுமிடங்கள்தோறும் அவர் பின்னே தொடர்ந்து செல்வார். மழையும், வெயிலும் பசியும் உடற்றினுலும் அவற்றைப் பொருட்படுத்தாமற் கடுநடையாய் தன் குருவின் பின் நடப்பார். ஏதோ எண்ணங் கொண்டவர்கள் போல் கீரிமலைக்கு நடப்பார்கள். தீர்த்தம் ஆடாமலே ஆடிவிட்டோம் என்று கூறிக்கொண்டு திரும்புவார்கள். குருவின் கடும் மொழிகளை ஆசிமொழிகளாகக் கருதி, அவற்றுள் மகா வாக்கியங்களைப் பொறுக்கினுர்.

"ஒரு பொல்லாப்பு மில்லை"
"எப்பவோ முடிந்த
காரியம்"
"நாம் அறியோம்"
"முழுதும் உண்மை"

என்னும் நாலு அருள் மொழிகள் தம் வாழ்க்கையைத் திடமுடன் நடாத்த உறுதுணைகளாயின. செல்லப்பா சுவாமிகள் 1915-ம் ஆண்டு பங்குனித் திங்கள் அச்சுவினி நன்நாளில் சமாதியடைந்தார். தவக்குரவன் தமக்கு ஞான தீட்சை செய்தருளிய நாளிலே சந்தனத்தாளியன்ற திருவடிகள் இரண்டை யமைத்துத் திருவடி பூசை செய்து வருவாராயினுர்.

"ஆக்கை நீ யல்லை நீயோ
ஆன்மாவென் றெனக்குச்
சொல்லித்
தீக்கைவைத் தாண்டு
கொண்டதேசிகன்
றிருத்தாள் வாழ்க."
"ஔவன நல்லை தன்னில்
அழகிய ஆடல் காட்டிச்
செவ்விதி னுண்டுகொண்ட
செல்வன்றன் தாள்கள்
வாழ்க".

என்று போற்றிப் புகழ்ந்து வாழ்வாராயினர்.

### சிவதொண்டன் மலர்

"சிவதொண்டன் என்னும் செல்வச் சிறுவன் பல வருடத்துப் பன்னு மார்கழி மதி 'ஜனவரி 1935' எவருமுவப்ப யாழ்ப்பாணத்தில் வண்ணை மாநகர் வைத்தியநாதன் தண்ணருளாலே தானவதரித்தான்". அன்று "வயதிற் சிறியன் மதியிற் பெரியன்' தாளமேள மில்லாமல் தான் வளரும் தொண்டன்" இன்று ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியாகி மிளிர்கின்றுன்.

'நற்சிந்தனை' என்னும் நல்ல முகத்தை அடியார்கள் பருகிச் சிறப்புடன் வாழ எங்கள் குருநாதன் வழியருளியுள்ளார். தினமும் நாங்கள் ஆற்ற வேண்டிய பணிகளை வகுத்துள்ளார்:

"எழுக புலருமுன், ஏத்துக
பொன்னடி
தொழுது வணங்குக
தூநீறணிக
பழுதிலைந் தெழுத்தும்
பன்னுக பன்முறை"
"அன்னைபிதாவின் அடியிணை
வணங்க"
"கண்ணைப் போலக் காக்க
அறத்தை"
"செய்வன எல்லாஞ்
செய்வன செய்க"
"தன்னை அறிக தனே
ஆகுக"
"ஈசன் அடியினை ஏத்தி
ஏத்தி
வாசவலர் கொண்டு
வாழ்த்தி வாழ்த்தி",

நன்மனறியிற் செல்வோமாக.

'ஒழுக்கம் விழுப்பந்தரும் தம்பிமாரே' என்ற பாடலில் நாங்கள் சிவதொண்டர்களாய் வாழ ஒழுங்குகளை விளக்கியுள்ளார். அழுக்காறு, அவா, வெகுளி ஆன்மாவைப் பாதிக்குமாகையால், பழுத்த அடியாருடன் கூடி, மலரடியைச் சிந்தை செய்து பாடிப் பணிந்து, ஆன்மாவே நாங்கள் என்று ஓதியுணர்ந்து, உய்யும் வழி இதுவே என அருளியுள்ளார்.

'முத்திக்கு வழியை மொழியக் கேண்மோ' என்ற பாடலில் நாங்கள் கையாளவேண்டிய சத்தியம், பொறுமை, சாந்தம், அடக்கமாகிய பண்புகளை வளர்த்து, பக்தி செய்யடியாரைப் பணிந்து, தன் போற் பிறரையும் பேணி, பணபபற்றெழிந்து, பண்புடன் வார்த்தை பயின்று, வேண்டுதல் வேண்டாமையின்றி, ஆண்டவன் அடிக்கிழ் அமர்ந்துவாழ் தலே என அருளியுள்ளார்.

### சிவதொண்டன்நிலையம்

சிவதொண்டன் மலரே எங்கள் செல்வம் 'நற்சிந்தனை' என்னும் நறுமலர்சேர் நன்மரமாகிய கற்பகதரு உருவாதற்குக்காரணமாகவிருந்த செல்வம். நற்சிந்தனை என்னும் அமிர்தத்தை அருந்தி, சிந்தித்துத் தியானத்தில் மூழ்க சிவதொண்டன் நிலையம் 1954-ம் ஆண்டு நவம்பர்மாதம்நாலாம் திகதியாழ் நகரில் உருவாகியது

"சிவதொண்டன் நிலையத்
திற் சேரீர்
தியானஞ் செய்து கடைத்
[illegible] தேறீர்
மவுனமாயிருந்திளைப் பாறீர்
மந்திர மிதுவெனக்குறியீர்"

என்பது எங்கள் குருநாதனின் அன்புக் கட்டளையாகும். அடியார் நன்னெறியிற் செல்லும் வகையாக.

"சொல்லெல்லாம் மோனம்
தொழிலாதியும் மோனம்
எல்லாம் நன் மோன
நிறையே"

என்னும் இலட்சியத்தைக் கையாளும்படி வேண்டப்படுகின்றனர்.

இவ்வாறு அருள்புரிந்த ஐயன் முன்னுளிற் பாரதப்போரில் வீழ்ந்த பீஷ்மாச்சாரியார் தாம் முடிவெய்தும் பருவத்தை அடைந்திருந்தும், தூயவரவலிமையினுல் தமது உயிரை விடாமல் உத்தாராயண காலம் வரும்வரையும் சரசயனத்திற் பொருந்தி வாழ்ந்தது போல மகா சமாதி எய்துவதற்குத் தாம் தொடங்கிய திருவடிப் பூசைத்திருநாளை எதிர்நோக்கியிருந்தார்கள். 1964ம் ஆண்டு பங்குனித்திங்கள் ஆயிலிய நன்னுளில் மகாசமாதியடைந்தார்கள்.

ஒவ்வொருமாத ஆயிலிய நட்சத்திரத்தன்று எங்கள் குருநாதன் தம்குரவரைக் கண்டாளப்பட்ட நல்லூர்த்தேரடியில் நண்பகல் பூசை நிகழ்ந்தது தொடர்ந்து மகேசுர பூசையும், மாலையில்சிவதொண்டன் நிலையத்தில் விசேட பூசைகளும் நிகழ்கின்றன.

சிங்கப்
ளுக்கான
கப்படும்
வற்றுட
தொடர்
பியா ஆ
ஒழுங்கு

ம. அரு
678/7, பூ
அரியாலை
(அர்ச். பூ
அருகான
(C-1317)

## ...பிரயாண ஒழுங்கு

...ர் சென்று பணியாற்ற விரும்பும் பெண்க... பிரயாண ஒழுங்குகள் உடன் செய்துகொடுக்... விபரங்களுக்கு பாஸ்போட் 6 படம் ஆகிய... கீழ்க்காணும் முகவரியில் 24-03-86க்கு முன்... கொள்ளவும். மற்றும் குவைத், சவூதி அரே... நாடுகளுக்கான ஆண்களுக்கான பிரயாண...ம் செய்துகொடுக்கப்படும்.

...தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

...ானந்தம்,
...ளி ஒழுங்கை,
...ாதேயுசிலைக்கு

N. பாலா,
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்,
(பலாலிவீதி கோண்டாவில்
சந்திக்கருகாமை)

**எம்பயர் திரையில்**
10-30, 2-30, 6-30,
ரஜனி—ஸ்ரீதேவி
**அடுத்த வாரிசு**

**சரவணபவன்**
மினி சினிமா
10-30, 2-30, 4-45, 7-00
STRIKER
Attack, Thrill,
Murder, Suspence
Audlts Only

LIDO Jaffna
10-30, 2-30, 6-30
இன்று முதல்
சிவாஜி-சரிதா-ஜெய்சங்கர்
நடித்த
**கீழ்வானம் சிவக்கும்**
புதிய பிரதி [கலர்]

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா கவுண்டமணி
நடித்த
**நான் பாடும் பாடல்**
(கல )

## நாவற்குழி...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வெடித்ததாகவும் கூறப்படுகின்றது.

வயோதிபர் ஒழுங்கையால் வந்து கொண்டிருந்த போது காயமடைந்ததாகவும், குழந்தை விளையாடிக்கொண்டிருந்த போது காயம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

முதல் ஒரு ஷெல்' விழுந்ததாகவும் ஒரு மாமரம் விழுந்து முறிந்ததாகவும், அப்போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும், இரண்டாவது முறை 'ஷெல், வீட்டு ...வற்குள் விழுந்து வெடித்து சிதறியதால், சிலர் காயமடைந்ததாகவும் கூறினர்.

## மட்டக்களப்பில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சத்தமும் கேட்டது.

...தடுதல் நடத்திய ஆயுதப் படையினர் பஞ்சந்தொடுவாய் அருகில் உள்ள வாவியில் அனாதரவாக மிதந்து கொண்டிருந்த இரு மீன்பிடித்தோணிகளையும் கைப்பற்றியுள்ளனர். இவை மீன்பிடித்துக்கொண்டிருந்தவர்கள் பீதியினால் இரு தோணிகளையும் கைவிட்டு தப்பிச்சென்றவர்களினாக இருக்கலாமென்று நம்பப்படுகிறது.

(மா)

மரங்களும், இச்சம்பவத்தின் போது சேதமுற்றதாகவும் தெரிவித்தார். [க]




# வியாபாரக் குறிகள் வெறும் வேடிக்கை அல்ல

ஆயுள் முழுவதும் நீடித்துழைக்கிறது எஸ்-லோன். ஓர் உற்பத்திப் பொருளின் வியாபாரக் குறி பல உண்மைகளை வெளிப்படுத்துகின்றது. பி.வீ.சீ. குழாய்களைப் பொறுத்தளவில் எஸ்-லோன் என்ற வியாபாரக் குறியும் அப்படியே.

பி.வீ.சீ.-குழாய்களுள் முதற்தரமானது என்பதற்கு எஸ்—லோன் உத்தரவாதமளிக்கின்றது. எஸ்-லோன்கால்நூற்றுண்டுக்கு மேலாக கட்டிடக்கலைஞர்கள், பொறியியலாளர்கள், ஒப்பந்தக்காரர்கள் அனைவரினதும் முழு நம்பிக்கையைக் கொண்டிருப்பதன் காரணமும் அதுவே.

ஒழுக்குத் தடையுடையதும் சிறந்த மின்காப்புத் தன்மை கொண்டதுமான எஸ்-லோன், விற்பனையின் பின்னர் கைதேர்ந்த பராமரிப்புச் சேவை, எமது ஆக்கபூர்வமான ஆலோசனை என்பவற்றுக்கும் உறுதியளிக்கின்றது. எமது வியாபாரக் குறியை எஸ்-லோன் குழாய் இணைப்பு ஒவ்வொன்றிலும் காணலாம்.

எஸ்-லோன் என்ற குறியையே குறிப்பிட்டுக் கேளுங்கள்.






மீட்டர் ரூபா 13.05 தொடக்கம்

த மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட்,
467, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி: 93716-9.

# "அனைத்து இயக்கங்களும் மக்களின் நலனைநிறைவேற்றவேண்டும்"

[யாழ்ப்பாணம்]

'அனைத்து இயக்கங்களும் மக்களின் நலன்களை நிறைவேற்றக் கூடியனவாக இருக்க வேண்டும், மக்களின் தலைவர்களாகவும், சேவகர்களாகவும் செயல்படக்கூடிய தன்மையுடையதாய் செயல்பட வேண்டும். மக்களை அணிதிரட்டி மக்கள் யுத்தம் ஒன்றை நடாத்தக் கூடியனவைகளாக இருக்க வேண்டும் ''

தமிழ்ஈழமக்கள் விடுதலைகழகம்(புளட்) கடந்த மாதம் நடந்த கழகத்தின் தளமகாநாடு தொடர்பாக நேற்று வெளியிட்ட செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த செய்தியில் மேலும்கூறப்பட்டிருந்தத வது; ''மகாநாட்டின் பேராளர்களாக மத்தியஸ்தாபனத்தின் அங்கத்தவர்களில் பெரும்பாலானவர்கள் பங்குபற்றியதுடன் படைத்துறைச் செயலரும் [தோழர் கண்ணன்] அரசியல் செயலரும், [தோழர் வாசுதேவா] மகாநாட்டில் முழுமையாகப் பங்குபற்றினுர்கள்.

கழகத்துள் நடந்த அராஜகவாதம் மகாநாட்டில் கண்டிக்கப்பட்டது. நடந்த இத்தவறுகளுக்காக நாம் மனம் வருந்துகிறோம் இத்தவறுகள் நடப்பதற்குக் காரணமாயிருந்த ஒழுங்கற்ற அமைப்பு வடிவமும, தனிநபர்களின் ஆதிக்கங்களும் இல்லாதொழிக்கப்படுவதற்கான தீர்மானங்களை மகாநாடு எடுத்துள்ளதைப் பகிரங்கமாக அறியத்தருகின்றோம். இவ்வித தவறுகளில் ஈடுபட்டவர்கள் கண்டிக்கப்பட்டார்கள். இக்குற்றங்கள் விசாரணைக்குட்படுத்தபட வேண்டும் எனவு, குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும மகாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டது மேலும் கழகத்துள் மாத்திரமல்ல மாற்று இயக்கங்களுடனும் நாம் அராஜகவாத நடவடிககைகளில் சந்தர்ப்பங்களில் ஈடுபட்டுள்ளோம். மாற்று விடுதலை அமைப்புக்களுடன் ஐக்கியப்படுவதில் எமது இத்தவறுகளும் ஒரு தடையாக இருந்துள்ளதை மகாநாடு முழுமையாக ஏற்றுக்கொண்டது இவ்வித நடவடிக்கைகளை மகாநாடு வன்மையாகக் கண்டித்தது. மக்களுடன் கொள்ளும் உறவிலுங்கூட கழகம் பல அராஜகவாதத் தவறுகள்மேற்கொண்டதை மகாநாடு ஏற்றுக் கொண்டது இவை தொடர்ந்தும் நடைபெருமல் தடுப்பதற்கான வழிவகைகளை மகாநாடு வகுத்துக்கொண்டது.

கழகத்தின் உயர் அங்கத்தில் அங்கம் வகித்த தோழர் சந்ததியார் சழகத்தின் உயர் அங்கத்தாலேயே மரணதண்டனைக்குள்ளாக்கப்பட்டார் என்பதையும் பகிரங்கமாக ஒத்துக்கொள்கிறோம்.

எமது ஸ்தாபனத்தில் உட்கட்சி ஜனநாயகமின்றி இருந்ததாலும், ஸ்தாபனத்துள் தனிநபர்களின் ஆதிக்கங்கள் மேலோங்கிஇருந்ததாலும் பல உயிரோட்டமுள்ள அரசியல் சக்திசள் எமது ஸ்தாபனத்தை விட்டு விலக நிாப்பந்திக்கப் பட்டுள்ளார்கள். இதற்காக நாம் மிகவும் வேதனையடைகிறோம், இவ்விதம் விலகியவர்களையும் முன்னைய காரணங்களால் விலகியவர்களையும் நாம் வெவ்வேறு கண்ணோட்டத்துடனேயே நோக்குகிறோம். இக் காரணங்களினுல் வெளியேறிய 'தீப்பொறி' உட்பட அனைத்து அரசியல் சக்திகளுடனும் விமர்சனம், சுய-விமர்சன அடிப்படையில் உறவை ஏற்படுத்திக் கொள்ள விரும்புகிறோம்

இராணுவ விவகாரத்தைப் பொறுத்தவரையில் நாம் இதுவரை கடைப்பிடித்து வந்த கொள்கையின் தவறுகளை மகாநாடு விமர்சித்தது. இராணுவ நடவடிக்கைகளைப் பொறுத்தவரை ஒரு மந்தமான செயற்பாடு இருந்தது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இயக்கங்களை குணும்சங்களுடையதாய் உருவாக்குதல் மக்களாகிய உங்களின் கடமைசளாகும். இயக்கங்களும், இயக்க அங்கத்தவர்களும் உங்கள் எஜமானர்களல்ல. நீங்கள் தான் இயக்கங்களின் எஜமானர்கள். உங்களுக்காகத்தான் இயக்கங்களே தவிர, இயக்கங்களுக்கான நீங்கள் அல்ல ஆகவே எமது இயக்கம் தவறு செய்தால் அதைத் தட்டிக் கேட்கும் உரிமையும் கண்டிக்கும் உரிமையும் உங்களுக்கு உண்டு. அனைத்து அதிகாரங்களும் மக்களுக்கே

எமது இயக்கத்தின் தவறுகளை சுயவிமர்சனம் செய்து கொண்டு எமது இயக்கத்தை மறு சீரமைப்பதில் ஈடுபட்டுள்ள எமது தோழர்களை தட்டிக்கொடுங்கள். எமது இயக்கத்தை மறுசீரமைக்கும் கடமையில் நீங்களும் உங்களாலான பங்களிப்பை வழங்குங்கள்.''

# புதிய பொதுசன நூலகம் அமைக்கத் திட்டம்

(புலோலி)

பருத்தித்துறை நகரசபைப் பகுதியில் 6 லட்சம் ரூபா செலவில் நவீன மாடிக்கட்டிட பொதுசன நூலகம் ஒன்றை அமைப்பதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது தற்பொழுது பருத்தித்துறை தும்பளை வீதியில் சிவனகோவிலுக்கு அருகாமையில் இயங்கி வரும் பருத்தித்துறை நகரசபை பொதுசன நூலகம் பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருப்பதனுலேயே புதிய நவீன மாடிக்கட்டிடத்தை அமைக்க வேண்டிய முக்கியத்துவம் ஏற்பட்டுள்ளது

இந்தநவீன மாட்டிக்கட்டிட பொதுசன நூலகத்தின் முதற் கட்ட வேலைகளுக்கென இவ் வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 3 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் மிகுதி 3 இலட்சம் ரூபா அடுத்த வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாகவும் பருத்தித்துறை நகரசபை செயலாளர் திரு. எஸ் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

## கூட்டுறவுப் பயிற்சி நெறி

[யாழ்ப்பாணம்]

மூன்ருண்டு இடைவெளியின் பின்னர் யாழ், மாவட்டத்தில் மீண்டும் கூட்டுறவுப் பயிற்சி நெறி ஆரம்பமாகவுள்ளது.

குருநகர் பீச்ரேட்டில் உள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ள இந்தப் பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்புவோர் தமது சான்றிதழ்களுடன் இன்று காலை 9 மணிக்கு மேற்படி கல்லூரிக்கு வருமாறு கேட்கப் பட்டுள்ளனர்.

# "கைதடிக் கிராமத்திற்கு ஒளி விளக்காக திகழ்ந்தவர்"

(சாவகச்சேரி)

''அடக்கு முறை எந்த வடிவத்தில் வந்தாலும் அவற்றை உடைத்தெறிய வேண்டுமென்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தவர் அமரர் சா.மு.தம்பித்துரை அதிபர்'' என்று தண்ணீரூற்றில் காலமான முன்னுள் கைதடி கலைவாணி வித்தியாசாலை அதிபர் சா.மு. தம்பித்துரையின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கலைவாணி வித்தியாலய அதிபர் நா. கந்தையா தெரிவித்தார்.

கைதடி கலைவாணி விததியாலயத்தில் சி. கதிரன் தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில்திரு.கந்தையா மேலும் பேசுகையில் 'கைதடி கிராமத்திற்கு ஒளி விளக்காக இருந்து பல துறைகளிலும் எமது மக்களை துலங்கவைத்த பெருமை அமரரையே சாரும். படிப்பறிவற்ற பாமர மக்களாக இருந்த எம்மவரை தட்டியெழுப்பி கல்வி அறிவூட்டி வளர்தத அமரர் தம்பித்துரையின் மறைவு எமது கிராமத்திற்கு பெரிய இழப்பாகும்'' என்ருர்.

திரு.பொன்.செல்லையா தம

(7ம் பக்கம் பார்க்க)

## 'பண்டத்தரிப்பு மக்கள் அவை'

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு கிராம சேவை அலுவலர் பகுதியிலுள்ள பொதுநல ஸ்தாபனங்கள் ஒன்றிணைந்து 'பண்டத்தரிப்பு மக்கள் அவை' என்ற அமைப்பை நிறுவியுள்ளனர்.

இதன் அங்குரார்ப்பணக் கூட்டம் பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. மண்டபத்தில் திரு. ஏ வி துரையப்பா தலைமையில் அண்மையில் நடைபெற்றது. பண்டத்தரிப்பு பங்குத்தந்தை அருட்திரு ஜெயக்குமார் அடிகள், வண சாம் தம்பு அடிகள் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்தினுர்கள். மக்கள் அவையின் அமைப்பாளர் திரு. ச. செந்தூர்ராசா இக்கூட்டத்தில் கலந்துகொண்டு மக்கள்அவையின் நோக்கம், செயற்பாடு ஆகியனபற்றி விளக்கமளித்து உரை நிகழ்த்தினுர்

பண்டைத்தரிப்பு மக்கள் அவையில் இணக்கசபை திரு. ஏ. வி. துரையப்பா தலைமையிலும், நிவாரணக்குழு திரு. எவ். சிங்கராயர் தலைமையிலும், விழிப்புக்குழு திரு எஸ் அல்போன்சஸ் தலைமையிலும் இயங்குவது என்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது

மக்கள் அவையின் நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றபோது தலைவராக திரு ஏ வி துரையப்பாவும், செயலாளராக பண்டத்தரிப்பு கிராம சேவை அலுவலர் திரு. பி கபிரியல் பிள்ளையும், பொருளாளராக சில்லாலை ரேமன் கத்தோலிக்க கனிட்ட வித்தியாலய அதிபர் திரு. ஏ. எஸ். லோறன்ஸ்சும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். உப குழுக்களின் தலைவர்களும் செயலாளர்களும் மக்கள் அவையின் மத்திய செயற்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

## சைவாலய முன்னேற்றக் கழகம்

(யாழ்ப்பாணம்)

சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் பணியிலும் சைவாலங்களை முன்னேற்றும் வகையிலும் செயல்படுவதற்காக ஊரெழு இறையன்புள்ள இளைஞர்கள் ஒன்றுகூடி சைவாலய முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பை அண்மையில் உருவாக்கியுள்ளனர்.

இந்த சைவாலய முன்னேற்றக்கழகத்தின் உறுப்பினர்கள் அனைவரும் சரியை திருத்தொண்டு பணியில் மிகவும் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

திரு துரைராசா தலைமையில் இக்கழகம் மிகவும் குறுகியகாலத்தில் சைவஅடியார்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளது.

இக்கழகத்தின் நிர்வாகிகள் பின்வருமாறு: செயலாளர் பரமநாதன் பார்த்திபன், பொருளாளர் தர்மதுரை மதனராசா, உபதலைவர் செல்லத்துரை சுரேந்திரன், உப செயலாளர் சனகலிங்கம்முரளி உபபொருளாளர் பரபசிவம் அருள்நம்பி, மற்றும் 25 பேர் கள்கொண்ட உறுப்பினர்களும் இக்கழகத்தில் அங்கம் வகிக்கின்றனர். [ஐ)


## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ சுவிஸ்
★ இத்தாலி ★ பிரான்ஸ்
★ மேற்கு ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு
உங்களை எமது பிரதிநிதி வெகுவிரைவில்
அழைத்துச்செல்வார்.

உடன் தொடர்பு கொள்ளவும்:

**லிப்ருஸ் லிமிற்ரெட்,**

R G கட்டடம்,
No 70, ஸ்ரான்லிவீதி,
யாழ்ப்பாணம்,

No 60, SEA BEACH ROAD,
PETTAH,
Tele. No. 29148

மற்றும்

விசா, ரிக்கற், பாஸ்போட், பொன்ட்
ஆகியவற்றிற்கும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

(A 402)



# LANKA CEMENT LIMITED
KANKESANTHURAI.

நீண்டகால ஒப்பந்த அடிப்படையில் சுண்ணும்புக்கல்
காங்கேசன்துறையில் உள்ள எமது கற்குழியில் உடைத்து எடுப்பதற்கானதும்
அவற்றை 2 கி மீ தூரத்தில் உள்ள எமது கல் நொருக்கி
இயந்திரத்திற்கு எடுத்துச் செல்வதற்குமான

அழைப்பு:

நாள் ஒன்றுக்கு 3000 தொன் சுண்ணும்புக் கற்களை காங்கேசன்துறையில் உள்ள எமது கற்குழியில் இருந்து பாரிய இயந்திரங்கள் மூலம் உடைத்து கனரக வாகனங்களில் ஏற்றி 2 கி மீ தூரத்திலுள்ள எமது கல்நொருக்கி இயந்திரத்திற்கு காலை 7-00 மணிக்கும் மாலை 5-00 மணிக்கும் இடையில் இறக்குதல்.

கற்களை உடைப்பதற்கும் அவற்றை அள்ளி கனரக வாகனங்களில் ஏற்றுவதற்குமான பாரிய வாகனங்களை வேலைக்கு அமர்த்தக்கூடிய கைதேர்ந்த ஸ்தாபனங்கள் அல்லது ஒப்பந்தகாரர்கள் மேற்படி விடயமாக நீண்டகால ஒப்பந்தத்தை செய்வதற்கு வேண்டிய தொழில்நுட்ப மற்றும் தகவல்களைப் பெறுவதற்கு எமது தொழிற்சாலை முகாமையாளரை அவரது காரியாலயத்திலோ அல்லது பொதுமுகாமையாளரை 251, தர்மபால மாவத்தை, கொழும்பு 7ல் உள்ள லங்கா சீமெந்து லிமிட்டெட் காரியாலயத்திலோ காரியாலய நேரத்தில் சந்திக்கும்படி அன்புடன் வேண்டிக் கொள்ளுகிறோம்.

பொதுமுகாமையாளர்,
**லங்கா சீமெந்து லிமிட்டெட்**
காங்கேசன்துறை.

(A 360)

## 9-வது ஆண்டு நினைவஞ்சலி

### திரு. சுப்பிரமணியம் வில்லியம் வில்வராஜா



மலர்வு: 16-10-1918
உதிர்வு: 22-03-1977

நீங்கள் மறைந்து விட்டீர்கள். நாங்கள் மறக்கவில்லை.

தங்கள் நினைவு நாளான இன்று எங்களுடைய அஞ்சலி.

மனைவி, பிள்ளைகள்.
மானிப்பாய். C 1364

## 45-வது தின நினைவுப்பா

'நயினையம்மை எங்கள் அம்மை'

### நமசிவாயம் தையலம்மை



ஈன்றவள் மடியில்: 09-03-1909

ஈசன் அடியில்: 06-02-1986

அலைதழுவும் அணிநகராம் நயினை தன்னில் அம்பிகையின் அருள் மழையில் உதித்ததையலம்மா கலை மலிந்த தேர்களெல்லாம் கருகி வீழக் கதறி மக்கள் வெள்ளமெனக் கவின்று ஓடக் கொலை வெறியர் கூட்டம் எங்கள் கோவில் தன்னை கொளுத்து மிந்தச் செய்திதனைக் கேட்கு முன்னம் நிலையில்லா வாழ்வினையே நினைந்து நீயும் நிமலனடி சென்றனையோ நிந்தன் வாழ்வில்.

திருமதி நமசிவாயம் தையலம்மை அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று நயினையம் பதியின் தீர்த்தக்கரையினில் நடைபெறும். அன்பர்கள் அவரின் ஆத்ம சாந்திக்காக எம்முடன் கலந்து கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

நயினை இரத்தினசிங்கம்.

'கந்தன் கருணை'
மண்கும்பான். C 1340

# இன்றைய பலன்

மாதம்- பங்குனி
திகதி- 9 (22 - 3 - 1986)
கிழமை- சனி
திதி- ஏகாதசி
பி. ப. வரை
நக்ஷத்திரம்- பூசம்
காலை 6-30 ன் மேல் ஆயிலியம்

மேடம்: உத்தியோக உயர்வுக்கும் உரிமைகளைப் பெறுவதற்கும் உகந்தநாள். திருப்திகரமான இடமாற்றமும் ஏற்படலாம்.

இடபம்: உழைப்பினுல் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரத்துறையில் விருத்தியுண்டு உயர் கல்வியில் ஈடுபடுபவர்களுக்கு உகந்த தினம்.

மிதுனம்: பணம் பல வழிகளிலும் செலவாகும். அந்நியர் ஒருவரால் ஏமாற்றம் அடையக்கூடும். நிதானம் வேண்டும்.

கடகம்: உடல் நலம் சிறிது பாதிக்கப்படும். உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும். பூமியாலும் சுகமுண்டு.

சிங்கம்: திருப்திகரமான முன்னேற்றம் உண்டு. பிறநடைய நன்மதிப்பை பெறுவீர்கள். கல்வித்துறையில் சிறப்பான தினமாகும்.

கன்னி: தொழில் துறையில் எதிர்பாராத நஷ்டத்திற்கும் இடமுண்டு. வெளியிடத்து கடிதம் வேதனையைத் தரலாம் மனத்திடம் வேண்டும்.

துலாம்: மற்றவர்களின் இன்னல் கண்டு இரக்கம் காட்டுவீர்கள். தாராளமான குணத்தின் மூலம் தனமும் செலவாகும் புண்ணிய யாத்திரையும் உண்டு.

விருச்சிகம்: வாழ்வில் வெற்றித் திருநாளாகும். எதிலும் அதிர்ஷ்டம் உங்கள் பக்கமே இருக்கும். வெளியிடத்துத் தொடர்புகளும் சிறப்பைத் தரும்.

தனுசு: துன்பத்தின் ரேகைகள் படரும். எதற்கெடுத்தாலும் சீறி விழுவீர்கள். கொடுக்கல் வாங்கல் மூலம் தொல்லைகள் தோன்றும்.

மகரம்: பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். குடும்பப் பிரச்சினைகளில் சுமுகமான நிலை தென்படும். சுற்றாடலிலும் மதிப்பு உண்டு.

கும்பம்; தொழில்துறையில் தொல்லைகள் தோன்றும். தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும். அடுத்துக் கெடுப்பதற்குச் சிலர் முனைவர்.

மீனம்: பிதாவழிச்சுகம் உண்டு. ஆத்மீக விடயங்களில் ஈடுபாடு தோன்றும் பெரியவர்களின் ஆதரவுமுண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

## 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலி



### எம் குணம் மைக்கல் குலாஸ் (வினோத்)

ஆண்டவன் படைப்பு: 16-05-55
ஆள்பவன் பறிப்பு: 22-02-86

குடும்பத்தில் இளையவனே! குன்றாய் ஒளி விளக்காய் குவலயத்தில் வலம் வந்த கோமகனே. குணமணியே!! அவலத்தில் நீயிறக்க ஆண்டவன் திருவுளமோ? ஆணவம் பிடித்த அந்த இராணுவம் தீர்த்தவேட்டு, அந்தோ, தம்பீ, உன் ஆருயிரைக் குடித்ததுவோ; இடும்பேதும் செய்யவில்லை இளவலே நீ எங்கள் ஈழத்தைக் காண்பதற்கோ இன்னுயிர் ஈந்து நின்றாய்? அடிமைத் தளையறுக்க அஞ்சாது நீ துணிந்தாய், அடிமை அகலும் நாள் மிகவும் விரைவில்வரும். அன்னுள்வரை பொறுத்திருப்போம். அன்பே, ஆரமுதே உன் ஆத்மா சாந்திபெற எம்மிறையை வேண்டுகின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
அப்பா, அண்ணன்மார்,
அக்காமார், தங்கை,
மைத்துணிமார், மக்கள்,
மருமக்கள், மச்சான்மார்,
உறவினர்கள்,
நண்பர்கள்.

வங்காலை,
மன்னார். [C1339]

## கைதடிக்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

துரையில் ''1954 ம் ஆண்டு 3 ஆசிரியர்களோடு இந்தப் பாடசாலையை பொறுப்பேற்ற அமரா தம்பித்துரை தான் பொறுப்பேற்ற சில நாட்களில் 8 ஆசிரியர்களாக உயர்த்தியதுடன் பாடசாலையையும் தரமுயர்த்தினுர். அவர் இங்கு அதிபராக இருந்த காலத்தில் மாலை நேரங்களில் ஒவ்வொரு மாணவரின் வீடுகளுக்கும் சென்று மாணவர்கள் வீட்டில் படிக்கிறுர்களா என்பதனை பரிசோதிப்பார். இதனுல் மாணவர்கள் கல்வியில் சிரத்தை கொள்ளும்படி செய்தார். அன்று அவரிடம் படித்த மாணவர்களில் ஒருவர் தான் இந்தப் பாடசாலையின் தற்போதைய அதிபர் என்கின்ற பொழுது பெருமகிழ்ச்சியடையவேண்டும்'' என்றுர்.

கூட்ட முடிவில் அமரர் தம்பித்துரையின் உருவப் படம் பாடசாலை மண்டபத்தில் வைக்க வேண்டுமெனபாடசாலையின் அதிபரைபலர்வேண்டிக் கொண்டனர்.

## தவக்காலச் சிந்தனை



32-ம் நாள்

அடிமைத்தனத்தில் இருந்த மக்கள் மீட்பை ஆசித்தனர் கானுன் நாட்டை நோக்கி நடக்கையிலே வழியில் பட்ட துன்பங்களைத் தாங்க மாட்டாது தம்மை மீட்டு வந்த இறைவனின் செயலை தூஷித்தனர். இறுதியில் அவர்களில் பெரும்பாலோர் பாலைவனத்திலேயே மடிய வேண்டியிருந்தது. சுதந்திர நாட்டை அனுபவிக்கும் பேறற்றவரானர். ஆனல் அவர்களது பிரமாணிக்கமின்மையின் மத்தியிலும் ஆண்டவர் அவர்களை முழுமையாக கைவிட்டு விடவில்லை. அவர்கள் சந்ததியை வாக்களிக்கப்பட்ட நாட்டில் வாழ வழி செய்தார். அவர்களை ஆழ அரசர்களை நியமித்தார். அவர்களோடு சமாதான உடன் படிக்கையை செய்து கொண்டார். இவ்வாறு தம் மக்களை இறைதன் பரிசுத்தப்படுத்தினுர்.

பொன்னைப் புடமிடுவது போல மனித வாழ்வில் துன்பங்கள் நம்மைப் பரிசுத்தமாக்குகின்றன. நமது பாவங்களை நாம் நீக்கி புதிய உள்ளம் கொண்டு வாழும்போது ஆண்டவனின் ஆசிரை நாம் பெறத் தகுதியுடையவராகிறோம்.


## விற்பனை

### 'SAKURA' கலர் பிலிம்

சுருள்கள் குறைந்த விலையில் விற்பனையாகின்றன.

Sakura Photo Suppl'ers,
233/1-1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C 1329)


## வட பிராந்திய போக்குவரத்துச் சபை கழிக்கப்பட்ட உதிரிப்பாகங்களை கொள்வனவு

# செய்வதற்கான கேள்விப்பத்திரம்

வ. பி. போ. சபையின் கோண்டாவில் சாலையிலுள்ள பின்வரும் கழிக்கப்பட்ட உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன

| | |
|---|---|
| 1. உடைந்த வில்லுத்தகடு | கூறுகள் |
| 2. அலுமினிய வெட்டுத்துண்டுகள் | அளவுகள் |
| 3. றேடியேற்றர் கோஸ் | எண்ணிக்கை |
| 4. பித்தளைச் சாமான் | அளவுகள் |
| 5 கழிக்கப்பட் ரயர்கள் 900/20, 825/20, 560/20, 525/25 | எண்ணிக்கை |
| 6. பிறேக் ஓயில் | அளவாக |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பப் பத்திரங்களை 1986-03-31 திகதிக்கு முன்னர் தலைவர் கேள்விப்பத்திரச் சபை, வட பிராந்திய போக்குவரத்துச் சபை கோண்டாவில் சாலை என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்,


பொருட்களை பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணம் சாலை அதிபரின் அனுமதியுடன் பார்வையிடலாம்.

சி கனகரத்தினம்
தலைவர்/தகவுடை திகாரி,
வட பிராந்திய போக்குவரத்துச் சபை.

பலாலி வீதி.
கோண்டாவில். (A 395)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### சோ. ஜெகநாதன் (அமீன்)



அன்னையின் மடியில்: 05-06-1959
அராஜகத்தின் பிடியில்: 20-02-1986

தேசப்படத்தில் படிந்த கறையில் இவனின் கதையும் இணைந்து கொள்ளும். பாசமிகுந்த தோழனின் பாதையில் படைமணி திரண்டு எடுத்து செல்லும்.

உறவினர்கள்,
நண்பர்கள்.

மட்டுவில்,
சாவகச்சேரி. C 1359

## மின் தடை

### இலங்கை மின்சார சபையின் முக்கிய அறிவித்தல்

1986-03-23ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முக்கிய திருத்த வேலை காரணமாக காலை 8 00 மணி தொடக்கம் மாலை 5-00 மணி வரை பின்வரும் பகுதிகளுக்கு மின் விநியோகத்தடை ஏற்படுமென சகலமின்பாவனையாளர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

### மின்தடை ஏற்படும் பகுதிகள்

| | |
|---|---|
| உரும்பராய் | நவாந்துறை |
| கோண்டாவில் | குருநகர் |
| இருபாலை வீதி | சீ- நார் |
| கோப்பாய் | பாஷையூர் |
| கின்னமேலி | புங்கன்குளம் |
| கொக்குவில் | கனகரத்தினம் வீதி |
| நல்லூர் | தடடாமதரு |

இம் மின் தடையால் பாதிப்புறும் சகல மின் நுகர்வோரிடமிருந்து அவர்களுக்கு ஏற்படும் செதியீனங்களுக்காக இலங்கை மின்சாரசபை தனது மனவருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.

இப்படிக்கு
மின் பொறியியலாளர்,
யாழ் பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னுகம்.

[A 393]

## போத்தமும்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதயாத்திரை மேற்கொள்கையில் அவர் போதைவஸ்த்து வைத்திருந்தாரென்றே குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

திரு. போத்தம் இப்போது மேற்கிந்தியத் தீவில் அந்நாட்டுக் கிரிக்கெட்குழுவுடன் பல போட்டிகளில் ஈடுபட்டுள்ளார் அதனுல் அவர் இங்கிலாந்து திரும்பியதும் அவர் மீது வழக்குத் தொடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-செ)

# அப்பாவித் தமிழர் பலியாவது சாதாரண விஷயமாகிவிட்டது

## உலக மனித உரிமை குழுக்கள் கண்டனம்

(ராய்ட்டர்)

தமிழ்ப்பொது மக்கள் ஆயுதப்படையினரால் கொலைசெய்யப்படுவதும் 'லத்தீன் அமெரிக்கப் பாணி'யில் ஆட்கள் காணுமல் போவதும்; விசாரணையோ வழக்கோ இன்றி ஆட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்படுவதும் இன்றுஇலங்கையில் சகஜமான சங்கதிகளாகி விட்டன என்று உலக மனித உரிமைகள் குழுக்கள் கூறியுள்ளதாக 'ராய்ட்ட'ரின் விசேட திருபர் ரொபேர்ட் மார்ஹோனி தெரிவிக்கிறுர்.

''கடந்த பத்தாண்டுகளாக தமிழ்ப்போராளிகளுக்கு எதிராக தான் நடத்திவரும் யுத்தத்தில் திரு ஜெயவர்த்தன வின் இலங்கை அரசு அடிப்படை உரிமைகளை மீறியும் அப்பாவி மக்களைக் கென்றும் வந்துள்ளதாக இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள மனித உரிமைகள் சங்கங்கள் குற்றஞ்சாட்டிவந்திருக்கின்றன. லண்டனிலிருந்து இயங்கிவரும் சர்வதேச மன்னிப்புச்சபை ஆயுதப்படைகளினுல் இம்சிக்கப்படும் தமிழ்மக்கள் பற்றிய விவரபூர்வமான அறிக்கைகளை வெளியிட்டுவந்தது ஆனுல், இந்த அறிக்கைகள் பாரபட்சமானவை எனவும் உண்மைக்கு முரணுனது எனவும் இலங்கை கூறியது.

கடந்த ஜனவரியில் ஐ. நா. மனித உரிமைகள் கமிஷன் 194 தமிழர்கள் காணுமல் போனமை பற்றித் தெரிவித்திருந்தது'' என்றும் 'ராய்ட்டர்' விசேஷ நிருபரின் செய்தி மேலும் கூறுகிறது. (ஷ)

## இளம் தம்பதியர் பலி!

[முல்லைத்தீவு]

உபதபாலதிபரான இளம் பெண்ணும் அவரது கணவனும் ஆயுதப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியாஞர்கள்

நேற்றுக்காலை புதுக்குடியிருப்பைச்சேர்ந்த இரணைப்பாலை என்னுமிடத்தில் இப்பரிதாப சம்பவம் இடம்பெற்றது

பர்ணண்டோபிரான்ஸிஸும் அவரது மனைவியான ஜூலியாஞகிறேஸ் பிரான்ஸிஸும் பலியானவர்களாவர் இவர்களிருவரும் விவாகம் செய்து மூன்றுமாதமிமக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## விடுதலைப் புலிகள் அறிக்கை

[யாழ்ப்பாணம்]

நான்குமுனைத் தாக்குதலை நடத்த இராணுவத்தினர் மேற்கொண்ட முயற்சி தமது இயக்கப்போராளிகளால் முறியடிக்கப்பட்டதாக தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் இந்தச்சம்பவங்கள் இடம்பெற்றன அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

காரைநகர், தொண்டமானாறு, நாவற்குளி, யாழ். கோட்டை ஆகிய நான்கு முகாம்களிலிருந்து இராணுவத்தினர் நேற்றுக்காலை புறப்படவிருந்தபொழுது எமது இயக்கப்போராளிகள் எதிர்கொண்டு தாக்குதல் நடத்தினுர்கள்.

### 2 ஹெலிகொப்டர்கள் தாக்கப்பட்டன

''காரைநகர் கடற்படை முகாமிலிருந்து பீரங்கிப்படகுகளில் ஊர்காவற்றுறைக் கரையை நோக்கிவந்த இராணுவத்தினரை நோக்கி போராளிகள் நவீனரக ஆயுதங்களைக்கொண்டு கடுமையாகத் தாக்கினுர்சள். மூன்று மணித்தியாலங்கள் இத்தாக்குதல் இடம்பெற்றது. இராணுவத்தினருக்கு உதவியாகப் பறந்துகொண்டிருந்த ஹெலிகொப்டரைநோக்கி போராளிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். பின்னர் ஹெலிகொப்டர் அவ்விடத்தை விட்டுச் சென்றுவிட்டது படகுகளில் வந்த இராணுவத்தினரும் மீண்டும் முகாமுக்குத் திரும்பிவிட்டனர்.

''தொண்டமனுறு முகாமிலிருந்து வெளிவந்த இராணுவத்தினரை எதிர்கொண்டு போராளிகள் தாக்கினர். ஹெலிகொப்டர் ஒன்று இராணுவத்தினருக்கு உதவியாகப் பறந்து, தரையை நோக்கித் துப்பாக்கிப்பிரயோகம் செய்தது. போராளிகள் ஹெலிகொப்டரை நோக்கிச்சுடவே சேதமடைந்த நிலையில் பறந்துவிட்டது. இங்கு நடைபெற்ற நேரடிச்சமரில் இராணுவதரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளது.

''நாவற்குளி முகாமிலிருந்து வயல்வெளியூடாக நடந்து வந்த இராணுவத்தினரை எதிர்கொண்டு தாக்கியதால் அவர்கள் மீண்டும் முகாமுக்குச் சென்றுவிட்டனர்.

''யாழ் கோட்டை முகாமிலிருந்து வெளிவந்து பண்ணைப் பகுதியில் அட்டகாசம் செய்த இராணுவத்தினரை நோக்கி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலில் இராணுவ தரப்பில் சேதமேற்பட்டுள்ளது.

''இந்த நான்குமுனைத் தாக்குதலில் போராளிகள்தரப்பில் எவ்விதசேதமும் ஏற்படவில்லை'' என்று புலிகள் விடுத்துள்ள அறிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மா)

## அரசியல் தீர்வு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''இப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசியல்வழியை கடைப்பிடிப்பது தான் நல்லதாகஇருக்கும். இவ்விஷயத்தில பாரதம் ஆற்றக்கூடியபணி ஒன்று இருக்கிறது. அதைச்செய்து கொண்டும்வருகிறது. ஆனுல் முடிவில்லாமல்அதைச்செய்துகொண்டு இருக்கமுடியாது. இலங்கைத் தீவின்நிலைமைகள் அபிவிருத்தி அடையும்போது இப்பிரச்னைக்குத் தீர்வுகாண பாரதம் தன் நன்முயற்சிகளை அளிக்கத் தயாராக இருக்கும்.

''இலங்கை நிலைமையைப் பயனுள்ள வகையில் சமாளிப்பது பற்றி இந்தியா மற்றநாடுகளுடன் பேச்சுவார்த்தை நடாத்திவருகிறது ஆனுல் இது பற்றி இந்தியா தம்பட்டம் அடித்துக்கொள்ளவில்லை. இலங்கை விஷயத்தில், பாரதம் பொறுமையற்ற உணர்ச்சி பூர்வமான போக்கைக்கடைப்பிடித்தால் நல்லபயன் ஏதும் விளையாது.

தற்போதைய இலங்கை நிலைமை திருப்திகரமாகஇல்லை அது ஒரு உள்நாட்டுப் பிரச்னையாக இருந்தபோதிலும் அது இந்தியாவைப் பாதிக்கிறது இந்தப்பிராந்தியமும் இதனுல் பாதிக்கப்பட்டுவிடும்.'' என்றுர்.

இலங்கை இனப்பிரச்னையில் பாரதத்தின் பங்கை உறுப்பினர்கள் குறைகூறியபோது தான் அமைச்சர் மேற்கண்டவாறு கூறினுர்.

ஆத்திரமூட்டும் செயல்கள் இருப்பினும் நாம்பெரும் நிதானத்துடன் நடந்துகொள்கிறேம் என்றும் அமைச்சர் கூறினுர்.

பங்களாதேஷ் விவகாரத்தில் பாரதம் காட்டியதுபோன்ற மெய்யான ஆர்வத்தை இலங்கை விடயத்தில் இந்தியா காட்டவேண்டும் எனவும் பாகிஸ்தானுடன் நல்லுறவுகளை வளர்க்கவேண்டும் எனவும் சில உறுப்பினர்கள் கூறினர்.

## லண்டனில் இன்று கலாசார நிகழ்ச்சி

(லண்டன்)

'பாரதி கண்ட ஈழம்' என்னும் கலாசார நிகழ்ச்சியை இன்று சனிக்கிழமை லண்டனில் ஈழதேசிய விடுதலை முன்னணியின்ஆதரவில் 'ஈரோஸ்' கலாசாரக்குழு' நடத்தவுள்ளது. (ப-பி)

## பீரங்கித் தாக்குதல்: தீவுப்பகுதியில் பதற்றநிலை

(வேலணை]

ஊர்காவற்றுறைப் பகுதியில் காரைநகர் கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதல்களைத் தொடர்ந்து தீவுப்பகுதி எங்கும் பதற்றநிலை உருவாகியுள்ளது. போக்குவரத்துச் சேவைகளும் சீர்குலைந்தன.

அனலைதீவிலிருந்து புகையிலை சிப்பத்துடன் வந்து கொண்டிருந்த படகொன்றின் மீது கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலால் படகு மூழ்கடிக்கப்பட்டதாகவும் அதனைத் தொடர்ந்து ஹெலிகொப்டர் தாக்குதல் நடாத்தியதன் விளைவாக பல கட்டிடங்கள் சேதமாக்கப்பட்டும், பொதுமக்கள் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

ஊர்காவற்றுறைப் பகுதியைச்சேர்ந்த பருத்தியடைப்பு, மெலிஞ்சிமுனை. கரம்பன் பகுதியிலுள்ள மக்கள் அகதிகளாக வேலணைப் பகுதியில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

# மரண அறிவித்தல்

### எம், ஏ. பாலசுப்பிரமணியம்

புன்னாலைக்கட்டுவன்வடக்கு எம் ஏ. பாலசுப்பிரமணியம்(கணக்காளர், லோற்றல் காமன்ஸ்) காலமானுர். இவர் புனிதவதியின் அன்புக் கணவரும், பாலவள்ளி, பாலமுருகனின் அன்புத்தந்தையுமாவார். அன்னரது ஈமக்கிரியைகள் சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு 36/2. Initium Road, Dehiwalaஇல் நடைபெறும். [A 339]

### சீ. ஆறுமுகம்

குரும்பசிட்டி சீ ஆறுமுகம் காலமானுர். இவர் பூரணத்தின் அன்புக்கணவரும், வாமதேவன் (பொறியியலாளர், சவூதி) மகாதேவன் (ஆசிரியர்,யாழ் இந்துக் கல்லூரி , சக்திதாசன் (Farm House, வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு சீ. தம்பிப்பிள்ளை, காலஞ்சென்ற திரு. சீ. கதிரேசபிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார் ஈமக்கிரியைகள் 22-3-86 சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு நடைபெறும்.

[C 1378] தகவல்: A. மகாதேவா

### பர்ணந்து பிரான்சிஸ், பிரான்சிஸ் ஜூலியாஞ கிறேஸ்

இரணைப்பாலையைச் சேர்ந்த பர்ணந்து பிரான்சிஸ், அவருடைய மனைவி பிரான்சிஸ் ஜூலியாஞ கிறேஸ் (உப-தபால் அதிபர்) ஆகியோர் அகால மரணமானுர்கள். இவர்கள் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பர்ணந்து அன்னபூரணம் தம்பதிகளின் புதல்வரும், இரணைப்பாலையைச் சேர்ந்த செபமாலை ஞானம்மா தம்பதிகளின் புதல்வியும் ஆவர். இவ்வறிவித்தலை உற்றூர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும். மரணச் சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

(C 1380) தகவல்: ம. எ. அன்ரன்.

### வி. குணபாலசிங்கம்

(ஓய்வு பெற்ற பெருந்தெருக்கள் திணைக்கள உத்தியோகத்தர்)

திரு. வி. குணபாலசிங்கம் லண்டனில் 20-3-86ல் காலமானுர். அன்னுர் கொக்குவில் காலஞ்சென்ற திரு, விஜயரத்தினம். திருமதி கமலாம்பிகை (பாக்கியம்) அவர்களின் ஏகபுத்திரனும், கைதடி நவமணியின் அன்புக்கணவரும், திருமதி புவனேஸ்வரி சிவநேசனின் அன்புச்சகோதரரும், கைதடி காலஞ்சென்ற திரு. திருமதி இலங்கையர் அவர்களின் அருமை மருகனும், திருமதி குணலோஜினி ஸ்ரீராம் (லண்டன்), திரு. குணரஞ்சன் (கனடா), திருமதி குணரஜினி லோகநாதன் (சிங்கப்பூர்), திரு. குணசேகர் (மேற்கு ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தந்தையும் திரு சிவநேசன் (A. K. S யாழ்ப்பாணம்), திரு.இ உருத்திரன் (நைஜீரியா),காலஞ்சென்ற திருமதி இராசமணி இலங்கையர் (கண்டி), திரு.இ கணேசன் மட்டுவில் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்

அன்னுரின் ஈமக்கிரியைகள் லண்டனில் பின்வரும் விலாசத்தில் நடைபெற்றது.

No. 30, Lower Downs Road,
London S. W. 20, 8 Q G, U. K.

தகவல்: திருமதி வி. கமலாம்பிகை,
(C 1374) திரு. இ. கணேசன்.

### திருமதி பொன்னம்மா முத்துச்தம்பி

திருமதி பொன்னம்மா முத்துத்தம்பி தமது 101வது வயதில் 20- 3- 86 ல் காலமானுர். இவர் காலஞ்சென்ற விதானையார் முத்துத்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுவாமிநாதன் [இளைப்பாறிய நிர்வாக அதிகாரி, சுகாதாரசேவை], காலஞ்சென்ற சிவகாமசுந்தரி, அருணசலம் இளைப்பாறிய ஆசிரியர், யாழ் மத்திய கல்லூரி]. இராமநாதன் இளைப்பாறிய கூட்டுறவுக் காரியாலய பரிசோதகர்], பூமாலக்குமி [இளைப்பாறிய ஆசிரியை, மங்கையர்க்கரசி வித்தியாலயம், நல்லூர்], பேராயிரவர் [இளைப்பாறிய அதிபர் மானிப்பாய் இந்துக்கல்லூரி, (Nigeria) ஆகியோரின் தாயாரும், காலஞ் சென்ற மனேரஞ்சிதம (இணுவில்), காலஞ்சென்ற செல்லத்துரை J.P.,[இணுவில்], இராசநாயகம் [இளைப்பாறிய அதிபர், இராமநாதன் கல்லூரி, சுன்னுகம்], காலஞ்சென்ற நிர்மலாம்பிகை [கட்டுடை], காலஞ்சென்ற அன்னலிங்கம் [பிரபல வர்த்தகர், நல்லூர்], சாரதாதேவி [இளைப்பாறிய ஆசிரியை, மானிப்பாய் இந்துக் கல்லூரி, (Nigeria) ஆகியோரின் மாமியுமாவார். அன்னுரின பூதவுடல் 23-3-86 ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு அன்னுரின் சுதுமலை இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காகத் தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றூர். உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு. அருணசலம்,
(A504) முத்துத்தம்பி ஒழுங்கை, சுதுமலை.

### திருமதி கனகசபாபதி ஜீவரெட்டிணம் (இராஜேஸ்வரி)

வண்ணார்பண்ணை ஐயனுர் கோவிலடியைச் சேர்ந்த திருமதி ஜீவரெட்டிணம் (இராஜேஸ்வரி) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார் அன்னுர் காலஞ் சென்ற S. P. இராசையா - நாகம்மா, அவர்களின் சிரேஸ்ட புத்திரியும், M. S. கனகசபாபதியின் அன்பு மனைவியும், Dr. சிவகுமாரி ,ஷைலகுமாரி, ஹரிச்சந்திரன், பிரேமச்சந்திரா (லங்கா சிமெந்து லிமிட்டெட்) ஆகியோரின் அன்புத்தாயாரும், Dr. . Vசசீதரன், R. S விசாகன் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிருஷனின் பேத்தியுமாவர்.

அன்னுரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை 22-3-86 மாலை 4.30 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். 15, ஓட ஒழுங்கை

(C 1381) வண்ணுர்பண்ணை

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126